ருஷ்யப் புரட்சி

கேளுங்கள்
இதை!

கேளுங்கள் இதை!

கேளுங்கள்
இதை!

C 276

சோஷலிச நாகரிகம் ...

பிறந்தது

1917-ல் ...


உலகின் முதல் சோஷலிச அரசின் உதயம் உலக மக்கள் அனைவருக்கும் ஒரு புதிய, மெய்யான ஜனநாயக சமுதாயத்தைக் கட்டுவதற்கு வழியைத் திறந்து விட்டது.
அங்கு ஒன்றும் புரட்சி நடந்து விடவில்லை! லெனின் தன் அண்ணனைத் தூக்கிலிட்ட ஜார்மன்னன் மீது பழி தீர்த்துக் கொண்டார். அவ்வளவு தான்!
...போச்சு... ருஷ்ய நாடே போச்சு! போல்ஷிவிக்குகள் தேசத்தை இரத்தத்தில் மூழ்கடித்து விட்டார்கள்!


மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சி ருஷ்யாவைப் பொருளாதாரச் சீரழிவிலிருந்தும் தேசியச் சீரழிவிலிருந்தும் காப்பாற்றியது.
ருஷ்யப் புரட்சியைப் பற்றிய எல்லாப் புத்தகங்களையும் நீங்கள் படிக்க வேண்டுமா?
ஓர் ஆயுட் காலம் முழுமையுங்கூட அதற்குப் போதாது.
அந்தப் புரட்சியைப் பற்றி நூற்றுக் கணக்கான புத்தகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.
அந்தப் புரட்சியின் நண்பர்களும் அதன் எதிரிகளும் அதைப் பற்றி எழுதியிருக்கிறார்கள்.
உண்மையில் 1917ல் ருஷ்யாவில் நடந்தது என்ன?
சுவாரசியமான விவரம்: 1917ல் சோவியத்துகள் செய்த முதல் காரியம் அந்த நாட்டின் பெண்களைத் தேச உடமை ஆக்கியது தான்!





முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

ஆசிரியர்கள்: எ. தப்ரவோல்ஸ்கயா, யூ. மக்காரவ்

மொழிபெயர்ப்பாளர்: த. ஜெயகாந்தன்

ஓவியர்: அ. வசீலியெவ்

எழுத்துக் கலைஞர்: ஓ. வெச்சேரினா

РУССКАЯ РЕВОЛЮЦИЯ 1917 ГОДА: КАК ЭТО БЫЛО?
на тамильском языке

The Russian Revolution: What Actually Happened?
in Tamil

© Progress Publishers, 1985

© முன்னேற்றப் பதிப்பகம், 1988

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

ISBN 5-01-000873-4

P $\frac{0505030100-286}{014(01)-88}$ 353-88

உலக வரலாறு அசாதாரண உந்துசக்தி பெற்று முன்னேறியது மட்டுமல்ல; கடுமையான திடீர்த்திருப்பங்களை உருவாக்குவதும் சரித்திரத்திற்கு அவசியமாயிருந்தது. அத்தகு ஒரு திடீர்த்திருப்பத்தில்தான் முடை நாற்றம் வீசுகிற, ரத்தக் கறை படிந்த ரொமானவின் எதேச்சாதிகார வண்டி ஒரே அடியில் குடை சாய்ந்து வீழ்ந்து நொறுங்கியது.

வி.இ. லெனின்

1917ம் ஆண்டு மார்ச் 2ம் நாள் இரவு இரண்டாம் நிக்கொலாய் – கடைசி ருஷ்ய சக்கரவர்த்தி – 23 ஆண்டுக் காலம் ஆண்ட பிறகு முடிதுறந்தான்...
ருஷ்ய எதேச்சாதிகார ஆட்சி குடைசாயக் காரணமாக வரலாற்றில் ஏற்பட்ட திடீர்த்திருப்பம்தான் முதல் உலக மகாயுத்தம்
முதல் உலக மகாயுத்தத்தின் போது ஐரோப்பாவின் பெரும் பரப்புகள் — மேற்கு ருஷ்யா உட்பட — சுடுகாடாக்கப்பட்டன.
9.5 மில்லியன் பேர் கொல்லப்பட்டனர் அல்லது படுகாயமடைந்தனர்
20 மில்லியன் பேர் காயமடைந்தனர்
3.5 மில்லியன் பேர் நிரந்தரமாக ஊனமுற்றனர்

உலக அளவிலான இந்தப் படுகொலை ஏன் ஆரம்பமாயிற்று?
யாரோ ஒரு செர்பிய மாணவன் ஆஸ்த்ரோ-ஹங்கேரிய கோமகனை சராயெவோ என்ற இடத்தில் சுட்டுக் கொன்று விட்டான். அந்த நிகழ்ச்சி தான் இதை ஆரம்பித்து வைத்தது...
என்னது? யாரோ ஒரு கோமகன் கொலையுண்டதால் நாம் எல்லோரும் போரிடுகிறோமா! ஒரு போதும் அப்படி இருக்காது...

சராயெவோ கொலை பற்றிய கருத்துக்களும் அநேக சாட்சியங்களும் எஞ்சின. உதாரணமாக...
சந்தேகமில்லை... அவர்கள் கோமகனைத் தங்கக் கைத் துப்பாக்கியால்தான் சுட்டிருக்க வேண்டும்!
இந்த "ஏட்டுச் சுரைக்காய்களிடமிருந்து" உருப்படியாக ஒன்றும் வராது. அவன் முதன்முறை சுட்டதுமே கதை முடிந்து போயிற்று!
என் கைத்துப்பாக்கியின் லட்சணத்தைப் பார். இது சுடவே மாட்டேன் என்கிறது!


பிரான்ஸ் பெர்டினண்ட் என்கிற அந்தக் கோமகன் – ஆஸ்த்ரோ-ஹங்கேரிய சிம்மாசனத்தின் வாரிசு – 1914, ஜூன் 15(28)ல் சராயெவோவில் கொலையுண்டது முதல் உலக மகாயுத்தத்தைக் கட்டவிழ்த்து விட ஒரு நொண்டிச் சாக்காக ஆயிற்று.
நொண்டிச் சாக்கு
உலகம் முழுவதும் பற்றி எரிவதற்கு ஒரே ஒரு தீக்குச்சி தேவைப் பட்டது, அந்தத் தீக்குச்சி செர்பிய மாணவனின் கையில் இருந்தது. எனினும் அந்த யுத்தத்துக்கான உண்மையான காரணம், பெரிதும் வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகள் உலகை மறுபங்கீடு செய்வதில் கொண்டிருந்த ஆசையே ஆகும்.
யாரோ ஒரு மாணவனின் செயலுக்காக நாம் அனைவரும் இரத்தம் சிந்த வேண்டுமா?
அப்படி இல்லை. விஷயம் என்னவென்றால் முதலாளிகள் யுத்தத்தை வைத்துப் பணம் பண்ண விரும்புகிறார்கள்.
பட்டாளத்துக்கு ஆள். சேர்க்கும் இடம்
போர் முனையை நோக்

ஜெர்மன் கூட்டணி நாடுகள்
ஜெர்மனி
ஆஸ்திரியா-ஹங்கேரி
துருக்கி
உலகத்தைத் தங்கள் இஷ்டத்துக்கு மறுபங்கீடு செய்ய அவர்கள் பாய்ந்து ஓடுகிறார்கள்

நேச உடன்படிக்கை நாடுகள்
கிரேட் பிரிட்டன்
பிரான்ஸ்
ருஷ்யா
எந்த ஒரு சரித்திர நிகழ்ச்சியையும் போலவே உலக யுத்தமும், கடலில் மிதக்கும் ஒரு பனிப் பாறையை ஒத்திருந்தது. முகாந்திரங்கள் மேலெழுந்த வாரியாக இருந்தன, உண்மையான காரணங்கள் அலைகளின் ஆழத்தில் மறைந்திருந்தன.
அந்த யுத்தத்துக்கான முதன்மையான காரணம், ஜெர்மானிய – பிரிட்டிஷ் முதலாளித்துவத்துக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடே ஆகும்.


யுத்தம் வெடித்தவுடன் இராணுவத்துக்கு அழைக்கப்பட்டோரின் தொகை:
நேச உடன்படிக்கை நாடுகள் – 1,01,19,000
ருஷ்யா – 53,38,000
கிரேட் பிரிட்டன் – 10,00,000
பிரான்ஸ் – 37,81,000
ஜெர்மன் கூட்டணி – 79,22,000
ஜெர்மனி – 38,22,000
ஆஸ்திரியா – ஹங்கேரி – – 23,00,000
துருக்கி – 18,00,000
எனது வருமானம் ஆறு மடங்காகி விட்டது!
என்னுடையது ஐந்து மடங்காகப் பெருகி உள்ளது!
உம்... இன்னும் நான் எண்ணி முடித்த பாடில்லே!
ஜெர்மனி
பிரான்ஸ்
பிரிட்டன்
1.5 பில்லியன் மொத்த மக்கள்தொகையுடைய 38 நாடுகள் யுத்தத்தில் இழுக்கப்பட்டன. பல மில்லியன் மக்கள் இந்தப் படுகொலையில் பங்கு பெற்றனர். அமெரிக்கா கடைசியாக இந்த யுத்தத்தில் நுழைந்த போதிலும் அதுவே அதிகபட்ச லாபங்களை அறுவடை செய்தது.


இந்த யுத்தத்தில் வெற்றி பெற்றுக் கொண்டிருப்பது யார்?
நாம் இருதரப்பாரும் நஷ்டமடைந்து கொண்டிருக்கிறோம்.
யுத்தத்தால் யாருக்கு ஆதாயம்? தம் நாடு ஜெயித்தாலும் சரி, தோற்றாலும் சரி, எந்நிலையிலும் எவர் லாபமடிக்கிறார்களோ அவர்களுக்கு மட்டுமே ஆதாயம்.
ஆகட்டும் தம்பிகளே, தயக்கம் வேண்டாம்! இப்போது நானும் உங்களோடு சேர்ந்து விட்டதால் நிலவரங்கள் கைகூடி வருகின்றன. என்னுடைய வருமானம் ஏற்கெனவே பத்து மடங்குக்கு மேலே போய் விட்டது!
பிரான்ஸ்
அமெரிக்கா
பிரிட்டன்
ஜெர்மனி

2–257

"அடித்தட்டு வர்க்கங்கள்" பழைய வழியில் வாழ விரும்பவில்லை...

தொழிலாளர்கள், கிராமப்புற ஏழைகள், மத்தியதர விவசாயிகள் ஆகியோர் ருஷ்ய ஜனத்தொகையில் 80% ஆக இருந்தனர்.

ரஸ்புடீன், கிரிகோரி எஃபிமவிச் (பிறப்பு 1872) என்பவன் டொபோல்ஸ்க் குபெர்னியாவின் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன்; எதிர்காலம் பற்றிக் குறி சொல்பவன். ஜார் அரசனிடமும் அரசியிடமும் ஜாரைச் சார்ந்த அரண்மனைவாசிகளிடமும் பெரிய "தீர்க்கதரிசியாகவும்" "தோஷம் நீக்குபவனாகவும்" அளவு கடந்த செல்வாக்குப் பெற்றிருந்தான். அரசாங்க விவகாரங்களில் தலையிட்டான். ருஷ்ய அரசின் சகல விதமான கேடுகளுக்கும் அவனே காரணம் எனக் கருதிய முடியரசுவாதிகள் 1916ல் அவனைக் கொன்றனர்.



...பழைய வழியிலே தொடர்ந்து செல்ல முடியாது
ருஷ்ய எதேச்சாதிகாரக் கப்பல் முரண்பாடுகள் கொந்தளித்துக் கொண்டிருக்கும் ஒரு கடலில் தனது இறுதி அழிவை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்தது.
ஆஹா! என்ன அழகிய சூர்யாஸ்தமனம்!
முப்பது மாதங்களில் (1914 ஆகஸ்ட் முதல் 1917 பிப்ரவரி வரை) அமைச்சரவையின் 4 தலைவர்கள், உள்துறை அமைச்சர்கள் 6 பேர், யுத்த அமைச்சர்கள் 4 பேர் மாற்றப்பட்டனர்
ஆகஸ்ட் 1914
பிப்ரவரி 1917
ருஷ்ய எதேச்சாதிகாரத்தின் அஸ்தமனம்
ராணுவச் செலவுகள் மிதமிஞ்சுகின்றன
பண வீக்கம்
அந்நிய முதலீட்டுச் சார்பு
அரசாங்கத்தின் அவலம்
கப்பலில் பயணம் செய்வோர் கப்பல் மூழ்கப் போவதை உணர்வதாகத் தெரியவில்லை!
ஆனால் நமக்குத் தெரிகிறது எதேச்சாதிகாரம் தகர்வது திண்ணம். நம்மவர்கள் நிறையப் பேர் இருக்கிறோம்!
எதிர்த்தரப்பினர்

ருஷ்யாவில் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்த மிகப் பெரிய பூர்ஷ்வா கட்சிகள்
அரசியல் சட்ட ஜனநாயகக் கட்சி. **காடேட்டுகள்.** மிதவாத முடியாட்சி ஆதரவு முதலாளிகளின் முக்கியக் கட்சி
புராகிரஸ் கட்சி. **புராகிரஸிஸ்டுகள்.** பெரு முதலாளிகளின் தேசிய மிதவாத கட்சி
த்ருதொவிக் (தொழிலாளர்)குழு. ருஷ்ய கிராமப்புற முதலாளிகளின் நலனுக்காக நிற்பது
சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள். **எஸ்ஸேர்கள்.** ருஷ்ய குட்டி பூர்ஷ்வா பெரிய கட்சி. நகர்ப்புற, கிராமப்புற குட்டி பூர்ஷ்வாக்களின் நலனுக்காக நிற்பது
முடியாட்சியுடன் இணைந்த நாடாளுமன்றம்!
நிலச்சீர்திருத்தம் ஓங்குக!
பெரும் மூலதனம் செழிக்க, ஏகபோகங்கள் வலுப்பெற!
நாம் கூட்டுறவுகளில் ஒன்றிணைவோம்!
காடேட்டுகள்
எஸ்ஸேர்கள்
புராகிரஸிஸ்டுகள்
த்ருதொவிக்ஸ்
என்ன எதிர்க்கட்சிகள் இவை? எல்லாவற்றுக்கும் குறுக்காக ஜார் வழிமறித்துக் கொண்டிருப்பதைப் பற்றி யோசிப்பதாகவே தெரியவில்லை!
ருஷ்யாவில் புரட்சியை வழிநடத்திச் செல்லும் கட்சி ஏதும் தென்படவில்லை!


"தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைக்கான போராட்ட சங்கத்தை" 1895ல் **லெனின்** உருவாக்கியிருந்தார். மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் ருஷ்யாவின் சமூக-ஜனநாயக தொழிலாளர் கட்சி (ஆர். எஸ். டி. எல். பி.) அமைக்கப்பட்டது.
அந்தக் கட்சிதான் **போல்ஷிவிக்குகளை** உருவாக்கியது.
அத்தகைய ஒரு கட்சி இருக்கிறது!
... எதேச்சாதிகார எதிர்ப்புப் போராட்டங்களிலும் ருஷ்யா முழுதும் உள்ள முதலாளி வர்க்கத்தை எதிர்த்து நடத்தும் போராட்டங்களிலும் நாம், தொழிலாளி வர்க்கம் முழுமையையும் தேசியம் - மொழி என்கிற பேதங்கள் இல்லாமல் வலுமிக்க ஒரே அணியாய்த் திரட்டி, ஒருமுகப்படுத்தப்பட்ட போர்க்குணம் மிக்க ஸ்தாபனமாகச் செயல்பட வேண்டும்...

போல்ஷிவிக்குகள்... ஆண்டாண்டுக் காலமாகக் கம்யூனிசத்தின் எதிரிகள் இவர்கள் மீது சகல பழி பாவங்களையும் சுமத்திக் குற்றம் சாட்டி இருக்கிறார்கள்.

போல்ஷிவிக் என்கிற சொல்லின் பொருள் என்ன?

போல்ஷிவிசம் என்ற புதிய கருத்து 1903ல் ஆர். எஸ். டி. எல். பி. யின் இரண்டாவது காங்கிரசில் அதனுடைய முக்கிய பதவிகளுக்குத் தேர்தல் நடந்த சமயம் எழுந்தது. அப்போது லெனினின் ஆதரவாளர்கள் பெரும்பான்மையினராகவும் (போல்ஷிவிக்குகள்) சந்தர்ப்பவாதிகள் சிறுபான்மையினராகவும் (மென்ஷிவிக்குகள்) இருந்தனர்.

போல்ஷிவிக்குகள் யாருடைய பிரதிநிதிகள்?

ருஷ்யாவின் பாட்டாளிகளையும் ஏழை எளிய விவசாயிகளையும் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தினர்.

எங்களிடம் புரட்சியாளர்களைக் கொண்ட ஒரு ஸ்தாபனத்தைத் தாருங்கள், நாங்கள் ருஷ்யாவை ஆதியோடு அந்தமாக மாற்றிக் காட்டுகிறோம்.
வி.இ. லெனின்
லெனினுடைய இந்த வார்த்தைகள் ஒரு தீர்க்கதரிசனம் என்பது நிரூபணமாயிற்று. போல்ஷிவிக்குகள் வெகுஜனங்களை செயல் முனைப் புள்ள தீவிர அரசியல் வாழ்வுக்கு எழுச்சியுறச் செய்தனர். அவர்களது பணி பன்முகப்பட்டதாகவும் அனைத்தையும் தழுவியதாகவும் இருந்தது...
பிரசங்கங்கள், விவாதங்கள், சொற்பொழிவுகள்...
தொழிற்சாலை வளாகங்களில்...

கிராமங்களில்...
ராணுவப் பாசறைகளில், அகழ்வரிகளில் போர்முனையில்...
நாங்கள் நேரே போர்முனைக்கே சென்றோம். அங்கே காலணிகள் கூட இல்லாமல், குமட்டலெடுக்கும் நாற்றச் சேறு நிறைந்த துன்பமயமான அகழ்வரிகளில் இருந்த நலிந்த வீரர்கள் எங்களைக் கண்டதும் கன்றிப் போன முகத்தில் ஆர்வம் கொப்பளிக்க, உடைகளிலிருந்த கிழிசல்களினூடே குளிரில் நீலம் பாரித்த உடல் தெரிய, எங்களிடம் ஆவலுடன் கேட்டார்கள்: "எங்களுக்குப் படிப்பதற்கு ஏதேனும் கொண்டு வந்திருக்கிறீர்களா?"
20ம் நூற்றாண்டின் தலைசிறந்த பத்திரிகையாளர்களில் ஒருவரான ஜான் ரீடு ருஷ்யாவில் நடந்த புரட்சிகர நிகழ்ச்சிகளை நேரிடையாகக் கண்டவர்.
ஜான் ரீடு என்ற அந்த அமெரிக்கரின் நற்சான்று இது
அவர்கள் (போல்ஷிவிக்குகள்) தொழிலாளர்களின், போர்வீரர்களின், விவசாயிகளின் சாதாரண எளிய விருப்பங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அவற்றின் அடிப்படையில் தங்களது உடனடித் திட்டத்தை உருவாக்கினார்கள்.

பிப்ரவரி 10ல் பெட்ரோகிராடில் தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டங்கள் துவங்கின.
பிப்ரவரி 14ல் 58 தொழிற்கூடங்களைச் சேர்ந்த 90,000 தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர்.
பிப்ரவரி 23ல் (பழைய தேதி முறை) சர்வதேச மாதர் தினம் கொண்டாடப்பட்டது.
அன்றைய தினம் பெட்ரோகிராடில் உள்ள நெவ்ஸ்கி சாலையில் ஆயிரக்கணக்கான மாதர் அணி திரண்டு, 'உணவு கொடு!', 'யுத்தம் ஒழிக!', 'பெண்களுக்கு வாக்குரிமை கொடு!' என்று முழங்கினர்.
யுத்தம் ஒழிக!
பெண்களுக்கு வாக்குரிமை!

உணவு இல்லை
உங்கள் கணவர் போர்முனையில் கொல்லப்பட்டார்
கேக்
மகிழ்ச்சிகரமான மாதர் தினம்!
வாக்குரிமை
இவையே ருஷ்ய மாதர்கள் அந்த "நன்னாளில்" பெற்ற பரிசுகள்!
மாதர்களின் ஆர்ப்பாட்டத்தை ஆதரித்து 1,28,000 தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். வெகுஜனங்களின் இந்தப் புரட்சிகரமான நடவடிக்கைகளுடன் போல்ஷிவிக்குகளும் சேர்ந்து கொண்டனர். மிக வேகமாக வளர்ந்து கொண்டிருந்த அந்த இயக்கத்துக்கு அவர்கள் ஸ்தாபனமும் போதமும் தந்தனர்.
பெண்களுக்கு வாக்குரிமை!
யுத்தம் ஒழிக!
உணவு கொடு!
அந்த நாள் பிப்ரவரி புரட்சியின் தொடக்கத்துக்கு ஓர் அடையாளமாக இருந்தது.

பிப்ரவரி 24 ல் வேலைநிறுத்தம் செய்தவர்களின் எண்ணிக்கை 2,14,000ஆக ஆயிற்று.
பிப்ரவரி 25 ல் அரசியல் பொது வேலைநிறுத்தம் துவங்கியது. அது நகரத்தின் பொருளாதாரத்தை முடக்கிப் போட்டது.
பிப்ரவரி 25ம் தேதி மாலை, தலைநகரின் மாவட்ட ராணுவ கமாண்டரான ஜெனரல் கபாலவ், தலைநகரில் ஏற்பட்டுள்ள கலவரத்தைத் தாமதமின்றி அடக்க வேண்டுமென்ற உத்தரவை ஜார் மன்னரிடமிருந்து பெற்றார்.
நெருக்கடியான இந்தப் போர்க் காலத்தில் தலைநகரத்தில் இப்படிப்பட்ட கலகங்கள் விளைவது சகிக்க முடியாதது. நாளையே அவை ஒடுக்கப்பட வேண்டுமென்று நான் உத்தரவிடுகிறேன்.
மக்கள் கூட்டம் கூடுவதற்குத் தடை விதிக்கிறேன்.

பிப்ரவரி 26ல் நகரின் பல பகுதிகளில் ஒரு புறம் தொழிலாளர்களுக்கும் மறுபுறம் போலீசுக்கும் ராணுவத்துக்கும் இடையே ரத்தக் களரியான மோதல்கள் நிகழ்ந்தன.
பெண்கள் எந்தப் பக்கம் இருக்கிறார்களோ அந்தப் பக்கம் தான் வெற்றி பெறும்!
பெண்களுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? ராணுவம் யார் பக்கம் நிற்கிறது என்பது தான் முக்கியம்!

3–257



பிப்ரவரி 27 மாலையில் தொழிலாளர்களும் படையாட்களும் பெட்ரோகிராடு சோவியத்துக்குத் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தனர். மக்கள் தந்த நிபந்தனையற்ற ஆதரவு அவர்களுக்கு முழு அதிகாரத்தையும் கிடைக்கச் செய்தது. எனினும் சோவியத்தின் தலைவர்களில் பெரும்பான்மையினர் முழு அரசுப் பொறுப்பையும் ஏற்க இயலாதவையும் ஏற்க விரும்பாதவையுமான கட்சிகளைச் சேர்ந்தோராக இருந்தார்கள்.

சோவியத்துகள் – தொழிலாளர்கள், விவசாயிகள், படையாட்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் ஸ்தாபனங்கள். 1905–07ல் நடைபெற்ற முதல் ருஷ்யப் புரட்சியின் பொழுது இவை முதன்முதல் ருஷ்யாவில் தோன்றியவை.

பொது மக்களின் இந்தப் புரட்சி அலையினை முதலாளிமார்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி ஆதாயமடைந்தனர்...

... பெட்ரோகிராடின் வீதிகளில் படைவீரர்களும் தொழிலாளர்களும் தங்கள் அதிகாரத்துக்காக போராடிக் கொண்டிருந்த போது ஏற்கெனவே ஜாரிஸ்ட் டூமாவில் அமர்ந்திருந்த முதலாளித்துவ பிரதிநிதிகள் இப்போது தங்களைத் தாமே டூமா தாற்காலிகக் குழு என்று **பிப்ரவரி 27ம் தேதி இரவில்** பிரகடனம் செய்து கொண்டனர்.

மார்ச் 2ம் தேதி

டுமா தாற்காலிகக் குழு தனது பிரதிநிதிகளை ஜாரோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அனுப்பி, ஜார் முடி துறக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டது.

ஆயினும் அரசுரிமைக்கு அதிகாரம் கோருபவர்கள் உடனடியாக முன்வந்தனர்!

அதே நாளில் பெட்ரோகிராடு சோவியத் தலைவர்களின் ஆசியோடு முதலாளிகள் தாற்காலிக ருஷ்ய அரசாங்கத்தை ஏற்படுத்தினர்.

எப்பொழுதும் நமது மக்கள் பக்கமே இருப்போம்!
சுதந்திரம், ஜனநாயகம்!
பிரஜை
குச்கோவ்
ராணுவ - கடற்படை அமைச்சர்
பிரஜை
லுவோவ்
அரசாங்கத்தின் தலைவர்
குச்கோவ் - பெரு முதலாளி, 1905-1907 ருஷ்யப் புரட்சியின் தோல்வியை வரவேற்றவர்.
இளவரசர் லுவோவ்- பெருநிலப்பிரபு, புரட்சிகர இயக்கத்தை எதிர்த்து "இறுதி நடவடிக்கையை" முன்மொழிந்தவர்.
தாற்காலிக அரசாங்கத்தின் முதல் அமைச்சரவை

சமத்துவம், சகோதரத்துவம்!
நமது புரட்சிக்கு நல்வரவு!
பிரஜை
கொனவாலவ்
வர்த்தக - தொழில் அமைச்சர்
பிரஜை
திரேஷ்சென்கோ
நிதி அமைச்சர்
கொனவாலவ் - பெரிய நூற்பாலை அதிபர், தொழிலாளர்கள் மீது "இரும்புக் கரக்" கொள்கையை முன்மொழிந்தவர்.
திரேஷ்சென்கோ-பெரு நிலக்கிழார், சர்க்கரைஆலை அதிபர், "இறுதி வெற்றி வரை போர்"என்கிற கோஷத்தின் ஆதரவாளர்.
ஆட்சிக்கு வந்தவர்கள் யார்? ஒரு பக்கம் பூர்ஷ்வா ஜனநாயகவாதிகள். இன்னொரு பக்கம்...

1917 மார்ச்சில் இரண்டு சக்திகள் எங்குமே இல்லாத முறையில் அதீத முரண்பாட்டோடு பின்னிப் பிணைந்து ருஷ்யாவில் அதிகாரத்துக்கு வந்தன: ஒன்று முதலாளிகளது அதிகாரம், மற்றொன்று தொழிலாளர்கள், விவசாயிகளின் புரட்சிகர ஜனநாயக அதிகாரம்.
ஒன்று – தாற்காலிக அரசாங்கம், இரண்டு – பெட்ரோகிராடு சோவியத்.
ஒரே தேசத்தில் இரு வேறு ஆட்சி அதிகாரங்கள், அதிசயம் இல்லையா?
பெட்ரோகிராடு சோவியத் உத்தரவு எண். 1இன்படி நாம் இன்று ஒரு ராணுவக் குழுவைத் தேர்ந்தெடுப்போம்.
இப்போது, ஜெனரல், ஏனைய அதிகாரிகளின் உத்தரவுகள் நமது குழுவின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவையே.
அதற்கு ஜெனரல் அனுமதி தந்திருக்கிறாரா?


பூர்ஷ்வா தாற்காலிக அரசாங்கத்திடம் பெட்ரோகிராடு சோவியத் ஆட்சி அதிகாரத்தை விட்டுக் கொடுத்தது. சோவியத்தின் மென்ஷிவிக் தலைவர்களே இதற்குக் காரணம் ஆயினும் பெட்ரோகிராடு சோவியத் பொது மக்களின் பரிபூரண ஆதரவின் காரணமாக இன்னமும் உண்மையான ஆட்சி அதிகாரமுடையதாக இருந்தது.
வேலை செய்தது போதும்! ஒரு நாளைக்கு 8 மணி நேரம் வேலை என்று சோவியத் தீர்மானித்தது!
நமக்கு அபராதம் விதிக்க மாட்டார்களா?
அபராதம் வசூலிக்கும் முறைகளையெல்லாம் ஒழித்தாகி விட்டது!
பாட்டாளி வர்க்கத்தின் ஸ்தாபன, அரசியல் முதிர்ச்சியின் பற்றாக்குறையும், குட்டி பூர்ஷ்வா மக்கள் பகுதியோரின் மிதமிஞ்சிய செயற்பாடும்தான் இந்த இரட்டை ஆட்சிக்குரிய சமூக மூலாதாரமென லெனின் கருதினார்.

அந்த நாட்களில் பெட்ரோகிராடு வாசிகள் எண்ணற்ற பொது நிகழ்ச்சிகளிலும் கூட்டங்களிலும் பங்கேற்கப் பழகி விட்டனர். எனினும் இந்தக் குறிப்பிட்ட ஒரு பொதுக் கூட்டம் சரித்திரத்தில் நிலைத்து நிற்கும்.
1917, ஏப்ரல் 3
இது காறும் நாடு கடத்தப்பட்டிருந்த லெனின் அப்போதுதான் நாடு திரும்பியிருந்தார். அவரை வரவேற்க ஆயிரக்கணக்கான பெட்ரோகிராடுவாசிகள் திரண்டனர். அந்தச் சதுக்கத்தில் நின்றிருந்தவர்கள் மட்டுமல்ல,
ருஷ்யா முழுவதுமே அவரது பேச்சைக் கேட்டது
... தாற்காலிக அரசாங்கத்தின் தலைமையிலும் கூட யுத்தம் இன்னமும் ஏகாதிபத்திய யுத்தமாகத்தான் இருக்கிறது...
... தாற்காலிக அரசாங்கத்துக்கு எந்த விதமான ஆதரவும் கூடாது!...
... சோஷலிசப் புரட்சி ஓங்குக!...
ரயில் நிலையத்தில் என்ன கூட்டம்? யாரையாவது வழியனுப்புவதற்காக கூடியிருக்கிறார்களா?
இல்லை இல்லை. வழியனுப்புவதற்காக அல்ல, வரவேற்பதற்காக. போல்ஷிவிக்குகளின் தலைவர் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்திருக்கிறார். நிச்சயம் ஏதோ நடக்கப் போவது உறுதி!

ஆமாம், கனவான்களே! நமது நேச அணியினரே! யுத்தத்தில் நாம் வெற்றி அடைகிறவரை போராடுவதற்குத் தயாராக இருக்கிறோம்!
நாங்கள் போரிட விரும்பவில்லை!
இங்கே சண்டைக்குத் தோள் தட்டிக் கொண்டிருப்பவர்கள் யார் என்றே எனக்குப் புரியவில்லை.
வேறு யார்? தாற்காலிக அரசாங்கம்தான்.
அப்படியானால் அவர்களே போர் முனைக்குச் சென்று சண்டை போடட்டும்.

புரட்சியினால் ஏற்பட்ட முக்கியப் பிரச்னைகளான போரும் சமாதானமும், விவசாயி-தொழிலாளர் பிரச்னைகள், பசியையும் நோயையும் எதிர்த்த நடத்த வேண்டிய போராட்டம், தேசிய இனப் பிரச்னை ஆகியவற்றில் எதற்கும் தாற்காலிக அரசாங்கம் தீர்வு காணவில்லை, தீர்வு காணவும் முடியவில்லை. அது அளித்த கவர்ச்சிகரமான வாக்குறுதிகளெல்லாம் நீர்க்குமிழிகள் போல் உடைந்து போயின.
தாற்காலிக அரசாங்கம்
உணவு!
சமாதானம்!
சுதந்திரம்!
முதலாளித்துவ மந்திரிமார்கள் ஒழிக!
உணவு, சமாதானம், சுதந்திரம்!

ருஷ்யாவின் அரசியல் நாட்குறிப்பில் அந்த மாதங்கள் நெருக்கடிகள் மிகுந்தவையாயிருந்தன. வெகுஜன நிர்ப்பந்தம் காரணமாகத் தாற்காலிக அரசாங்கம் தனது அமைச்சர்களைப் பல தடவை மாற்றிக் கொள்ள வேண்டியிருந்தது. ஆனாலும் தொடர்ந்து அது பண மூட்டைகளின் பிரதிநிதியாகவே இருந்தது. எதிர்ப்புரட்சியாளர்கள் பதவியை விட்டு விலக வேண்டியதாயிற்று, ஆனாலும், அவர்களுக்குப் பதில் உடனுக்குடன் வேறு எதிர்ப்புரட்சியாளர்கள் பதவியில் அமர்த்தப்பட்டனர்.
56 பேர் கொல்லப்பட்டனர்
650 பேர் படுகாயமுற்றனர்
இல்லை. இது ஒன்றும் ஜாரிஸ்டுகளின் ஆட்சிக் காலம் இல்லை.
இது ஜூலை 4, 1917!
தாற்காலிக அரசாங்கத்தின் ராணுவம் அமைதியாகக் கூடியிருந்த 5,00,000 ஆர்ப்பாட்டக்காரர்களின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. அவர்கள் புரட்சியை காப்பாற்ற வேண்டுமென்று விரும்பினர்... தங்கள் சொந்த மக்களிடமிருந்தே!
ஜூலையில் நிகழ்ந்த ரத்தக்களரியான நிகழ்ச்சிகளுக்குப் பிறகு லெனின் எழுதினார்: "எதிர்ப்புரட்சியாளர்கள் ஸ்தாபனரீதியாக ஒன்று பட்டு விட்டார்கள். மெய்யாகவே அவர்கள் அரசு அதிகாரத்தை முற்றும் தங்கள் கையில் எடுத்துக் கொண்டு விட்டனர்."
இரட்டை ஆட்சிமுறை முடிவுக்கு வந்தது.

10
தொழிலாளி வோயினவை அவர்கள் ஏன் கொன்றனர்?
லிஸ்டாக் பிராவ்தி என்கிற போல்ஷிவிக் பத்திரிகையை அவன் விற்றுக் கொண்டிருந்தான்.
பிற்போக்குச் சக்திகளுக்குக் காலம் வந்திருக்கிறது.
லெனின் உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டும்.
போல்ஷிவிக் கட்சி சட்டவிரோதமாகச் செயல்பட வேண்டியிருந்தது. லெனின் பெட்ரோகிராடை விட்டு நீங்கி ரஸ்லிவ் என்ற சிற்றூரில் தலைமறைவானார்.

சிறைப் பிடித்தல், கொலை, பத்திரிகை அச்சகங்களின் மீது தாக்குதல் — இவ்வாறு எல்லாம் நடந்த போதிலும் போல்ஷிவிக் பத்திரிகைகள் போராட்டத்தில் தளரா உறுதியுடன் நின்றன. கட்சியின் பிரதான ஏடாகிய பிராவ்தா பத்திரிகை "ரபோச்சி இ ஸோல்டாத்" "புராலிடாரி", "ரபோச்சி புத்" என்று பல்வேறு பெயர்களில் வெளியாயிற்று.
பத்திரிகையைப் படித்தாயா? போல்ஷிவிக்குகளின் காங்கிரஸ் கூடுகிறதாமே! அது எங்கே நடக்கிறது என்று அவர்கள் ஏன் அறிவிக்காமல் இருக்கிறார்கள்?
தற்போதைக்கு காங்கிரஸ் சட்டவிரோதமாகத்தான் நடைபெற முடியும்.
ஜூலை 26 முதல் ஆகஸ்ட் 3 வரை
போல்ஷிவிக் கட்சியின் ஆறாவது காங்கிரஸ் பெட்ரோகிராடில் நடைபெற்றது. ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் ஈடுபடுவதென்றும், நாடு தழுவிய நெருக்கடி நிலையும் புரட்சிகர எழுச்சியும் வெற்றிக்கான சரியான சூழ்நிலையை உருவாக்குகிற போது மக்களை இயக்கத்தில் ஈடுபடத் தயாராக்குவதென்றும் தீர்மானம் செய்தது.

கேரென்ஸ்கி – தாற்காலிக அரசாங்கத்தின் புதிய பிரதம மந்திரி. "ருஷ்யப் புரட்சியின் பாதுகாவலர்" என்று தனக்குத்தானே முத்திரையிட்டுக் கொண்டவர்.

இந்த இருவரிடையே உள்ள

பொதுத் தன்மை என்ன?

கார்னீலவ் – தலைமை ராணுவத் தளபதி. "ருஷ்ய அரசின் பாதுகாவலராகத்" தன்னை அறிவித்துக் கொண்டவர்.

1917 ஆகஸ்ட் 21க்கும் 31க்கும் இடையே ஜெனரல் கார்னீலவ் தனது துருப்புக்களைத் திரட்டி பெட்ரோகிராடின் மீது படையெடுத்தார். ருஷ்யாவில் ராணுவ சர்வாதிகாரத்தை ஏற்படுத்துவதே அவர் நோக்கம். பெருமுதலாளிகளது பக்கபலத்தோடு நடந்த கார்னீலவ் கலகத்துக்கு நேச உடன்படிக்கை நாடுகளின் ஆதரவும் இருந்தது. கார்னீலவுக்கு எதிராக மக்களைத் திரட்டி போல்ஷிவிக்குகள் போராட்டம் நடத்தினர். புரட்சிகரப் படைவீரர்கள் அந்தக் கலகத்தை முற்றாக ஒடுக்கினர்.

கார்னீலவின் தோல்வி தேசத்தின் நிலைமையை அடியோடு மாற்றியது. பெருந்திரளினரான மக்கள் தாற்காலிக அரசாங்கத்தின் உண்மை சொரூபத்தை இறுதியில் புரிந்து கொண்டார்கள். போல்ஷிவிக்குகளின் செல்வாக்கு மக்கள் மத்தியில் வெகுவாக உயர்ந்தது.

4–257

1917 இலையுதிர்காலம் வந்தது . . .
அப்பா! குளிர் காலத்தில் இந்தப் பறவைகள் எங்கே போகின்றன?
வெப்பத்தைத் தேடி, இன்னமும் புரட்சி நடக்காத நாடுகளை நோக்கிப் போகின்றன, தம்பி!
உனது வெறுங் கையில் என்ன தேடுகிறாய்?
கடந்த இரண்டு வாரத்தில் எங்கள் உணவுப் பங்கீடு ஆறு முறை வெட்டப்பட்டிருக்கிறது. கடைசியில் அது கண்ணுக்கே புலப்படாத அளவுக்கு ஆகி விட்டது.
உணவு
இவருக்கு பைத்தியமா என்ன!
இந்த காலணியில் சரியாக மூன்றில் ஒரு பங்கு வெட்டித்தா.
வேறென்ன செய்வார்? அவரது சம்பளம் 35 ரூபிள்தான். காலணியின் விலையோ 100 ரூபிள்!

புரட்சி என்பது ஒரு வியாதி... இதர நாடுகள் இதில் தலையிட வேண்டும் – வியாதி வந்த குழந்தையைக் குணப்படுத்த டாக்டர்கள் தலையிடுவதைப் போல்...
பெருமுதலாளி லியனோஸவ்
ரொம்ப புத்திசாலித் தனமான கணிப்பு! "நண்பர்களே! நாம் இந்தப் புரட்சியை முடித்து விட விரைந்து செயல்படுவோம். புரட்சியை அதிக காலம் செய்கிறவன் அதன் கனிகளைச் சுவைப்பதே இல்லை."
பத்திரிகையில் புதிதாக என்ன செய்தி?
பயங்கரமான ருஷ்யக் குளிர்காலம் வந்து விட்டால் என்ன நடக்கும்?
என் அயல்நாட்டு நண்பரே! குளிர்காலம் எப்போதுமே ருஷ்யாவின் கூட்டாளியாகத்தான் இருந்திருக்கிறது. யார் கண்டது? இந்த முறை அது நமக்குப் புரட்சியிலிருந்து விமோசனம் கிடைக்கச் செய்யலாம்.
அனைத்து அதிகாரமும் சோவியத்துகளுக்கே!
ருஷ்யப் புரட்சியின் வசந்தமாகத் திகழப் போகிற அந்த இலையுதிர்காலம் வந்தது . . .

புரட்சியாளர்கள் இன்று வெற்றி பெற முடியும் (நிச்சயம் இன்று அவர்கள் வெற்றி பெறுவார்கள்) என்னும் போது, நாளைக்குப் பெரும் இழப்பு உண்டாகலாம், உண்மையில் அனைத்தையும் இழக்கும் ஆபத்து இருக்கிறது என்னும் போது, ஒத்திப் போட்டுக் கால தாமதம் செய்வார்களாயின் வரலாறு ஒருபோதும் அவர்களை மன்னிக்காது.

வி.இ. லெனின்

1917 அக்டோபர் 10 ருஷ்யாவின் சமூக - ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் (போல்ஷிவிக்குகள்) மத்தியக் கமிட்டிக் கூட்டம் ஆயுதம் தாங்கிய எழுச்சிக்கான உடனடி ஆயத்தங்கள் குறித்த லெனினின் தீர்மானத்தை நிறைவேற்றியது.

பெட்ரோகிராடு படைத்தளத்தின் புரட்சிகரப் படையாட்கள்.
அந்த எழுச்சியின் போராடும் அணிகள் இவ்விதமாயிருந்தன.
பால்டிக் கடற்படையின் மாலுமிகள்.
செங்காவலர்கள்.
செங்காவலர் படை – போல்ஷிவிக்குகள் தலைமையின் கீழ் 1917, மார்ச் முதல் ஆலைகளில் நிறுவப்பட்ட ஆயுதம் தாங்கிய தொழிலாளர் படைப் பிரிவுகள்.
உள்ளூர் புரட்சிகர ராணுவக் கமிட்டிகள்
தலைநகரில் போராட்ட சக்திகளை ஒன்று திரட்டுவதற்கான அமைப்பாக புரட்சிகர ராணுவக் கமிட்டி இருந்தது. கட்சி மத்தியக் கமிட்டி யோசனைப்படி பெட்ரோகிராடு சோவியத்தின் கீழ் அது அமைக்கப்பட்டது.
உள்ளூர் புரட்சிகர ராணுவக் கமிட்டிகள் – போல்ஷிவிக்குகளினால் துவக்கி வைக்கப்பட்டு, சோவியத்துகளால் உருவாக்கப்பட்ட போராட்ட அணிகள். பல்வேறுபட்ட வர்க்கத்தினர் மற்றும் சமூக மட்டத்தினரின் பிரதிநிதிகள் அவற்றில் அங்கம் பெற்றிருந்தனர்.
பெட்ரோகிராடில் அக்டோபரில் நடந்த ஆயுதமேந்திய எழுச்சியின் போது போல்ஷிவிக்குகளின் வசம் பெரும் படைப் பிரிவுகள் இருந்தன.
போராட்டத்தின் போது 40, 000 ஆக உயர்ந்த செங்காவலர்கள் இவற்றின் முன்னணிப் படையை உருவாக்கினர்.
புப்னோவ்
திஸெர்ஜின்ஸ்கி
எழுச்சிக்குத் தலைமை தாங்கிய புரட்சிகர ராணுவ மையம்.
ஸ்டாலின்
உரிட்ஸ்கி
இப்படித்தான் அந்த எழுச்சி அரசியல் வழியில் ஒழுங்கமைக்கப்பட்டது

அக்டோபர் 1917.
நான் எதற்காகப் போராடுகிறேன்? கான்ஸ்டான் டிநோபிலுக்காகவா? இல்லை... ருஷ்யாவின் சுதந்திரத்துக்காகவா? வருஷக்கணக்காக நாங்கள் ஏன் அகழ் வரிகளில் அடைந்து கிடக்க வேண்டும்?!
ஆலைகளில் தொழிலாளர்கள் நிர்வாகங்களை ஒழித்து கண்காணிப்பையும் கட்டுப்பாட்டையும் தம் கையில் ஏற்கத் தலைப்பட்டனர்.
தொழிற்சாலைகளை எங்களிடம் ஒப்படைக்க இதுவே தருணம்!
தொடர்ந்து நாலாவது பனிக்காலத்திலும் தங்களை அகழ் வரிகளில் தங்க வைக்கப் போகும் உத்தேசம் அரசுக்கு இருப்பதை உணர்ந்த படையாட்கள் போர் முனைகளைத் துறந்து ஓட முற்பட்டனர்.

தேசத்தின் நிலைமை இத்தகையதாயிருந்தது
விவசாயிகள் நிலக்கிழார்களை வெளியேற்றி நிலங்களையும் விவசாயக் கருவிகளையும் கைப்பற்றி அவற்றைத் தம்மிடையே பங்கிட்டுக் கொள்ள ஆரம்பித்தனர்.
ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் போராட்டம் உத்வேகம் பெற்றது. தொழிலாளர்கள், விவசாயிகளின் இயக்கத்தோடு இணைந்து அது ஒரு ஐக்கிய முன்னணியாக உருவாகத் தொடங்கியது.
எஜமானரே, வழியை விட்டு விலகிச் செல்லுங்கள், நீங்கள் இல்லாமலே நாங்கள் சமாளித்துக் கொள்வோம்...
கொஞ்சம் பொறுங்கள்! நானும் கூட ஜனநாயகத்தை ஆதரிக்கிறேன்! சுதந்திரத்துக்காகவும் தேசிய இனங்களிடையே சமத்துவத்திற்காகவும் நிற்கிறேன்!



அமைச்சர்
வாணிபத் துறை
அமைச்சர்
நிதித் துறை
பூர்ஷ்வா கட்சிகள்
பேரழிவைத் தடுத்து நிறுத்த ஆளும் வர்க்கங்களால் ஏதும் செய்ய முடியவில்லை

சோவியத்துகளில் அங்கம் வகித்த கட்சி சாரா உறுப்பினர்களால் தாற்காலிக அரசாங்கத்தின் கையாலாகாத் தனத்தையும், குட்டி பூர்ஷ்வா கட்சிகளின் கவைக்கு உதவாத வேலைத் திட்டங்களையும் தெளிவாகவே காண முடிந்தது அவர்கள் போல்ஷிவிக்குகளையும், சமூக மாற்றங்களுக்கான போல்ஷிவிக்குகளது எதார்த்த வேலைத் திட்டத்தையும் ஆதரிக்க முற்பட்டனர்.
நஷ்டப் பொருளாதாரம்
பூர்ஷ்வா கட்சிகள்
அரசாங்கம்

"அனைத்து அதிகாரமும் சோவியத்துகளுக்கே!" என்ற கோஷத்தைத் தொழிலாளிகளிடையே போல்ஷிவிக்குகள் முன்வைத்தனர்.
அனைத்து அதிகாரமும் சோவியத்துகளுக்கே!
இங்கே நீங்கள் பட்டினி கிடக்கிறீர்கள். அதே சமயம் சோவியத் உறுப்பினர்கள் கனி வகைகளைச் சுவைத்துக் கொண்டிருக்கிறார்கள்!
பெட்ரோகிராடின் தெருக்களில் இரு வேறுபட்ட
இருண்ட சக்திகளின் கையாட்கள் கடைக்காரர்களையும் சோஷலிஸ்டுத் தலைவர்களையும் கொலை செய்யுமாறு மக்களை ஏவி விட்டனர்.
வியாபாரி புப்கினின் கடை சூறையாடப்பட்டது!
புரட்சியின் பரம வைரிகள் போல்ஷிவிக்குகள்!
நேச உடன்படிக்கை நாடுகளுக்குத் தெரியாமல் ஜெர்மனியுடன் ஒரு சமாதான உடன்படிக்கையை யுத்த மந்திரி பிரேரேபித்தார்!

நாளுக்கு நாள் அரசாங்கத்தின் நிராதரவான நிலை அதிகரித்தது. நகர கவுன்சில் கூடக் குலைந்து போயிற்று. துணிகர கொள்ளைகளையும் கொலைகளையும் பற்றிய செய்திகள் வந்த வண்ணமிருந்தன. ஆனால் குற்றவாளிகளைத் தட்டிக் கேட்பார் இல்லை. இரவு நேரங்களில் தொழிலாளர்கள் நகர வீதிகளில் ரோந்து சுற்றி வந்து காவல் புரிந்தனர்; ஆயுதங்களைப் பறிமுதல் செய்தனர்; கொலைகாரர்களை விரட்டியடித்தனர்.
உலகங்கள் ஒன்றோடொன்று மோதத் தயாராயின
விரைவில் நடக்கவிருந்த சோவியத்துகளின் இரண்டாவது அனைத்து ருஷ்யக் காங்கிரசுக்கு நாடெங்கிலும் இருந்து பிரதிநிதிகள் வந்தனர்.
பிரதிநிதிகள் பதிவு செய்யும் இடம்



இன்றா – நாளையா?!
ருஷ்யப் புரட்சியின் வரலாற்றில் திரும்பு முனை வந்தது

5-257

பிரதம மந்திரி கேரென்ஸ்கியின் கருத்துப்படி, போல்ஷிவிக் பத்திரிகையின் இந்த இதழ் வெளிவந்திருக்கவே கூடாது.
ரபோச்சி புத்
தாற்காலிக அரசாங்கம் தாக்குதலைத் தொடங்கியது
அக்டோபர் 24ம் நாளன்று ரபோச்சி புத் (அந்நாளில் பிராவ்தாவின் பெயர்) பத்திரிகை அச்சகத்தைத் தாக்குமாறு அரசாங்கம் உத்தரவிட்டது.


பெட்ரோகிராடுக்குள் தாற்காலிக அரசாங்கத்தின் துருப்புக்களை நுழைய விடாதீர்கள்!
அரோரா போர்க்கப்பல் இந்த அறிவிப்பை விடுத்தது.
தாற்காலிக அரசாங்கத்தின் ராணுவப் படைகள் பாலங்களைத் திறக்க முயன்றன. ஆனால் செங்காவலர்கள் அவற்றைப் பாதுகாத்தனர். அந்நேரத்தில் புரட்சிப் படைகளைச் சேர்ந்த ஆயுதம் தாங்கிய கவச மோட்டார்கள் புரட்சியின் தலைமையகமான ஸ்மோல்னி மாளிகையில் ஒன்று திரண்டன.

"தோழர்களே!
இந்த வரிகளை 24ம் தேதி மாலை நான் எழுதுகிறேன். நெருக்கடி நிலைமை அதன் உச்சத்தை அடைந்திருக்கிறது. இந்நிலையில் எழுச்சியைத் தாமதப்படுத்துவது மெய்யாகவே பெரு நாசத்தை விளைவிக்கும் என்பது மிகத் தெளிவு."
மத்தியக் கமிட்டி உறுப்பினர்களுக்கு லெனின் எழுதிய கடிதத்திலிருந்து.
அக்டோபர் 24ம் தேதி மாலை. சம்ஸோனெவ்ஸ்கி சாலையும் ஸெர்தொபோல்ஸ்கயா தெருவும் கூடும் முனையில் உள்ள வீட்டிலிருந்து ஒருவர் புறப்பட்டார்... அவர்தான் இன்னும் சில மணி நேரத்தில் எழப் போகும் எழுச்சிக்குத் தலைமை தாங்கப் போகிறவர் என்று யாரும் நினைக்கவே இல்லை.
அவர்தான் லெனின்.
நண்பரே! நாம் எங்கே போகிறோம்?
புரட்சி நடத்துவதற்கு!
604

ஸ்மோல்னி.
புரட்சி ராணுவத் தலைமையகம்.
நாம் செயலில் இறங்க வேண்டும். சோவியத்துகளின் காங்கிரஸ் ஆரம்பமாகிற அதே நாளில், "இதோ ஆட்சி அதிகாரம்! இதை வைத்துக் கொண்டு நீங்கள் செய்யப் போவது என்ன?" என்று கேட்கலாம்.


ஸ்மோல்னி – புரட்சித் தலைமையகம். புரட்சிப் படைகள் அங்கு ஒன்று குவிந்தன.
எழுச்சியில் கலந்து கொள்ளத் தயாராக போர்க் கப்பல்கள் நேவா நதியினுள் பிரவேசித்தன.
10
9
8
7

12
1
அக்டோபர் 25ம் தேதி அதிகாலையில் எழுச்சியாளர்கள் கைப்பற்றியவை...
மத்திய தபால் நிலையம் 1.25 A.M.
நிக்கொலாயெவ்ஸ்கி ரயில் நிலையம் 2.0 A.M.
மின்நிலையம் 2.10 A.M.
பொழுது புலர்வதற்குள் நாம் பிரதான கேந்திரங்களைக் கைப்பற்றி விட வேண்டும்.
ஏனெனில் மாரிக்கால அரண்மனைக்கு அருகே ஏற்கெனவே தாற்காலிக அரசாங்கத்தின் துருப்புக்கள் தடை அரண்களை அமைக்க ஆரம்பித்து விட்டனர்.
4
5

அடுத்த நாள்
அதிகாலை நேரம் . . .
காலை 6 மணி அளவில் கடற்படை
யினர் அரசு வங்கியைக் கைப்பற்றினர்.
எங்களுக்கு
எல்லாமே
வேண்டும்!
என்ன இவ்வளவு
அதிகாலையில் !
உங்களுக்கு எவ்வளவு
பணம் வேண்டும் ?
அரசு வங்கி
காலை 8 மணிக்கு
செங்காவலர்கள் வார்ஸா ரயில்
நிலையத்தைப் பிடித்தனர் . . .
ஏ, இந்தச் சாமான்களை
எடுத்து வா!
நீயே
எடுத்துச் செல்!
என்ன
நடக்கிறது ?!
புரட்சி
நடக்கிறது,
அம்மணி!

காலை 7 மணிக்கு
மத்தியத் தொலைபேசித் தொடர்பகத்தைப்
படையாட்கள் பிடித்துக்
கொண்டனர்.
தயவு செய்து
தொடர்பு
அமைத்துக்
கொடுங்கள்,
மிஸ்!
நான் ஒன்றும்
'மிஸ்' இல்லை!
மாரிக்கால அரண்மனையின்
மீது தாக்குதல் தொடுப்பதற்குத்
தக்க தொலைவில் வந்து நின்றது
போர்க்கப்பல் அரோரா.
சிறு விவரம் விடாமல் யாவற்றுக்கும்
போல்ஷிவிக்குகள் தக்கபடி
திட்டமிட்டிருந்தனர். பொழுது
விடிவதற்குள் நகரம் எழுச்சி
யாளர்களின் வசமாயிற்று.

நம்முடைய அரசாங்கத்துக்கு எல்லாத் தரப்பிலிருந்தும் ஒருமித்த ஆதரவு கிடைக்கும்!
நம்மை எதிர்ப்பவர்கள் யாராக இருப்பினும் உடனடியாக ஒழித்துக் கட்டி விட வேண்டும்!
யார் இந்த போல்ஷிவிக்குகள்? எவரும் அவர்களைப் பின்பற்ற மாட்டார்கள்!
ஏற்கெனவே உங்களை அதிகாரத்திலிருந்து அகற்றியாகி விட்டதாக எல்லாரும் சொல்கிறார்களே! இன்னும் எதற்கு இங்கே உட்கார்ந்திருக்கிறீர்கள்? தேநீரை அருந்தி விட்டுப் பேசாமல் வீட்டைப் பார்க்கப் போய்ச் சேருங்கள்!
ஒன்றுமே நடக்காத மாதிரி அவர்கள் அப்படியே உட்கார்ந்திருக்கிறார்கள்.
அவர்களது ஆட்சிக்காலம் முடிந்து விட்டதை இன்னும் அவர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை!

அக்டோபர் 25ம் தேதி காலை புரட்சி ராணுவக் கமிட்டி "ருஷ்யாவின் குடிமக்களுக்கு!" என்ற லெனினின் வேண்டுகோளை விடுத்தது.
ருஷ்யாவின் குடிமக்களுக்கு!
தாற்காலிக அரசாங்கம் அகற்றப்பட்டு விட்டது... எந்த லட்சியத்துக்காக மக்கள் போராடினார்களோ... அந்த லட்சியம் நிறைவேறி விட்டது!
தொழிலாளர்கள், படையாட்கள், விவசாயிகளின் புரட்சி நீடூழி வாழ்க!

மாரிக்கால அரண்மனை மீது சூருவளித் தாக்குதல் நடப்பதற்குச் சில மணி நேரங்கள் முன்னர் அங்கிருந்த சூழ்நிலையை நேரில் கண்ட அமெரிக்கப் பத்திரிகையாளர் ஜான் ரீடு நினைவுகூர்கிறார்...
பெண்கள் படைப்பிரிவு தாற்காலிக அரசாங்கத்துக்கு விசுவாசமாக இருப்பதென்று தீர்மானித்திருக்கிறது!
இளம் பெண்களே! கதவைத் தாளிட்டுக் கொள்ளுங்கள். என்ன நடந்தாலும் நீங்கள் பத்திரமாக இருப்பீர்கள்.
கதவு ஏன் பூட்டியிருக்கிறது?
படையாட்களை வெளியே விடாமல் அடைத்து வைப்பதற்காக.
டு-மீ-ல்!
மாரிக்கால அரண்மனையை நோக்கி அரோரா போர்க்கப்பலிட்ட முழக்கமே அது.

நான் பிரதம மந்திரியைப் பேட்டி காண முடியுமா?
அலெக்ஸாந்தர் ஃபெதரவிச் கேரென்ஸ்கி தற்போது வேலையாக இருக்கிறார்... உண்மையைச் சொன்னால் அவர் இப்போது இங்கே இல்லை...
அவர் போர்முனைக்குப் போயிருக்கிறார். விஷயம் தெரியுமா? அவர் காரில் பெட்ரோல் தீர்ந்து விட்டது. நாங்கள் பிரிட்டிஷ் மருத்துவமனைக்கு ஆளனுப்பிப் பெட்ரோல் கொஞ்சம் வாங்கி வந்தோம்.
ருஷ்யாவையும் ஜனநாயகத்தையும் காப்பாற்றுவோம்!
கேரென்ஸ்கி
ருஷ்யாவை விட்டு வெளியேற விரும்புகிறேன். நான் அமெரிக்கப் பட்டாளத்தில் சேர்ந்து விடலாம் என்று தீர்மானித்துள்ளேன். உங்கள் தூதரக அதிகாரிகளிடம் சொல்லி ஆவன செய்வீர்களா?
அரண்மனை அப்படியே இருக்கிறதே. அவர்கள் குறிதவறி விட்டார்களோ, என்னவோ?
உங்கள் அரசாங்கத்தைத் தூக்கி எறிய வெற்று வெடிகளே போதும்.

ஆட்சி அதிகாரம் மக்கள் கைக்கு வந்தது
போல்ஷிவிக்குகள் இடையறாது கூறி வந்த அத்தியாவசியமான தொழிலாளர்கள், விவசாயிகளின் புரட்சி வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு விட்டது!
நாம் ஜெயித்து விட்டோம் என்று சொல்லுகிறீர்கள்!
அப்படி இல்லை. துவக்கமே நடந்தேறியுள்ளது. நாம் இன்னும் செய்ய வேண்டிய மகத்தான காரியங்கள் மலைபோல் இருக்கின்றன!



அக்டோபர் 25, இரவு மணி 10.40
ஆயுதம் தாங்கிய எழுச்சியின் உச்சகட்டத்தில் தொழிலாளர்கள், படையாட்களின் பிரதிநிதிகளது சோவியத்துகளின் இரண்டாவது அனைத்து ருஷ்யக் காங்கிரஸ் ஸ்மோல்னியில் கூடிற்று.
அக்டோபர் 26ம் தேதி பொழுது விடியுமுன் 2.10 மணிக்குத் தாற்காலிக அரசாங்கத்தின் அமைச்சர்கள் கைது செய்யப்பட்டனர்...
அரண்மனையிலிருந்த அதிகாரிகளும் படையாட்களும் நிராயுதபாணிகளாக்கப்பட்டு வெளியே அனுப்பப்பட்டனர்...
"நாங்கள் மாரிக்கால அரண்மனையை சேதப்படுத்தவில்லை, பாமர மக்கள் யாரையும் கொல்லவில்லை, ஆனால் எதிர்ப்புரட்சியாளர்களிடமிருந்து புரட்சியையும் சுதந்திரத்தையும் காப்பாற்றியுள்ளோம் என்று அறிவிக்கிறோம். எங்கள் பீரங்கிக் குண்டு மாரிக்கால அரண்மனையை மட்டுமல்ல, அதன் சுற்றுப்புறத் தெருக்களையும் தரைமட்டமாக்கி விட வல்லது... வதந்திகளை நம்பாதீர்கள்! எங்கள் பீரங்கியிலிருந்து வெடித்தது தீங்கற்ற வெற்று வேட்டே அன்றி வேறல்ல..."
போர்க்கப்பல் அரோராவின் மாலுமிக் குழுவினர் பிராவ்தா ஆசிரியருக்கு எழுதிய கடிதத்திலிருந்து
АВРОРА

ருஷ்யாவின் மக்களினங்கள் பல நூறு ஆண்டுகளாகக் கண்டு வந்த கனவு அந்த ஒரு நாளுக்குச் சற்றே அதிகமான பொழுதில் நனவாகியது. மெய்யான வெகுஜனத் தன்மை வாய்ந்த தொழிலாளர், விவசாயிகளது அரசாங்கத்தைத் தவிர வேறு எந்த அரசாங்கத்தாலும் சாதிக்க முடியாதது, சாதிக்க விரும்பக் கூட முடியாதது கைவரப் பெற்றது.
சோவியத் அரசு நிறைவேற்றிய முதலாவது சட்டங்களே இதைத் தெளிவுபட காட்டின.

6-257

சோவியத்துகளின் இரண்டாவது அனைத்து ருஷ்யக் காங்கிரசில் உலகிலேயே முதன் முறையாகத் தொழிலாளர்கள், விவசாயிகளின் அரசாங்கம் நிறுவப்பட்டது. அது தான் —
மக்கள் கமிசார் அவை
அவர்கள் கேரென்ஸ்கியைப் பதவியிலிருந்து விரட்டியடித்தது எதற்காக?
பெண் வேடம் பூண்டு அவர் மாரிக்கால அரண்மனையிலிருந்து தப்பி ஓட வேண்டியிருந்ததாமே?
பார்த்தாயா மாஷா! உன்னைப் பெண்கள் படைப்பிரிவில் சேர விடாதது எவ்வளவு சரியானதாயிற்று?
உடனடி சமாதானம் என்கிற வாக்குறுதி ஒரு புரட்டு! உணவு கிடைக்கும் என்கிற வாக்குறுதி ஒரு ஏமாற்று!
நிலம் கிடைக்கும் என்கிற வாக்குறுதி ஒரு கட்டுக்கதை!
போல்ஷிவிக்குகளின் வாக்குறுதிகளை நம்பாதீர்கள்.
அமைச்சர்


அரசாங்கத்தின் தலைவராக லெனின் தேர்ந்தெடுக்கப்பட்டார். மக்கள் கமிசார்களின் (அமைச்சர்கள்) நடவடிக்கைகளின் மீது கண்காணிப்பும் அவர்களை வேண்டும் போது அகற்றுவதற்கான அதிகாரமும் தொழிலாளர்கள், படையாட்கள், விவசாயிகளின் பிரதிநிதிகளது அனைத்து ருஷ்யக் காங்கிரசுக்கும் அதன் மத்திய செயற்குழுவுக்கும் உரியதாகும்.
என்ன எழுதியிருக்கிறது பார்த்தீர்களா? இதைக் கேளுங்கள்: "சோவியத்துகளின் காங்கிரசைப் பொறுத்தவரை அப்படி ஒன்றும் நடைபெறவில்லை என்பதே எமது வாதம்."
எனக்கு அப்போதே தெரியும்!
சரி, முதலாவதாக, ஜார் மன்னனை ஒழித்துக் கட்டினோம்...
இரண்டாவதாக, தாற்காலிக அரசாங்கத்தையும் ஒழித்திட்டோம்...
இனி நம்மை ஆளப்போவது யார்?
நாமே நம்மை ஆண்டு கொள்ளப் போகிறோம். நம்மில் ஒவ்வொருவரும் அரசாங்கத்தை நடத்துவதில் பொறுப்பு வகிக்கப் போகிறோம் என்று போல்ஷிவிக்குகள் சொல்கிறார்கள்.



ஆம், மெய்யான தொழிலாளி வர்க்க ஆட்சி அதிகாரம் இது. விவசாயிகளுடன் கூட்டு சேர்ந்து

சுரண்டல் இல்லாத

ஒரு சமுதாயத்தைக் கட்டியமைக்கிறது தொழிலாளி வர்க்கம்.



மக்கள் அரசாங்கத்தின் முன்னுள்ள பணிகள்:

சமுதாயம் பகைமை வர்க்கங்களாகப் பிரிந்திருப்பதற்கு முடிவு கட்டுதல்; மனிதனை மனிதன் சுரண்ட வழி செய்யும் எல்லா அடிப்படைகளையும் அறவே அழித்திடல்; ஒரு புதிய அரசுப் பொறியமைவைக் கட்டியமைத்தல்; ஒரு புதிய, சோஷலிச பொருளாதாரத்தை உருவாக்குதல்; ஒரு கலாசாரப் புரட்சியை நடைபெறச் செய்தல்.


1917 நவம்பர் 2ம் தேதி சோவியத் அரசு, தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முக்கியக் கோட்பாடுகளைப் பறைசாற்றிய ருஷ்யாவின் மக்கள் இனங்களது உரிமைகள் குறித்த பிரகடனத்தை வகுத்தளித்தது:
ருஷ்யாவின் எல்லாத் தேசிய இனங்களுக்கும் சமத்துவம், அரசு அதிகாரம்.
இதுவரை ஒரு தலைமுறையினரிடமிருந்து அடுத்த தலைமுறையினருக்கு வாய்மொழி மூலமே நமது வரலாற்றையும், பரம்பரைக் கதைகளையும் மரபுகளையும் சொல்லி வந்தோம். நமது மொழிக்கு வரி வடிவம் இருக்கவில்லை. இப்போதோ நாம் அதைப் பெறுவோம்! எதிர்காலத்தில் நமது சொந்த கல்விமான்களும் எழுத்தாளர்களும் பொறியியல் வல்லுனர்களும் தோன்றுவர்..
ருஷ்யாவின் பிரதேசங்களுக்குள் வாழ்கிற தேசிய சிறுபான்மையினருக்கும் பூர்விகக் குடிகளுக்கும் தங்குதடையற்ற சுதந்திர வளர்ச்சி.
எல்லாவிதமான தேசிய இன, மதச் சலுகைகளையும் தடை வரம்புகளையும் ரத்து செய்தல்.


ருஷ்யாவிலிருக்கும் எல்லாத் தேசிய இனங்களுக்கும் பிரிந்து போகிற சுதந்திர அரசுகளை நிறுவிக் கொள்கிற சுதந்திரமும் அடங்கலான பூரண சுயநிர்ணய உரிமை.
1917 டிசம்பர் 31ம் தேதியான இன்று சோவியத் அரசு, பின்லாந்து தேசத்தின் பிரிவினைக் கோரிக்கைக்கு செவி சாய்த்து, பின்லாந்தின் அரசு சுதந்திரத்தை அங்கீகரித்தது.
எல்லாரும் இலவசமாகவும் தங்கள் சொந்த மொழியிலும் கல்வி கற்கக் கூடிய நமது மக்களுக்கான முதலாவது பள்ளிக்கூடத்தை இன்று திறக்கிறோம்.
ருஷ்யா அழிந்து போச்சு! சாம்ராஜ்யமும் நாசமாய்ப் போச்சு! போல்ஷிவிக்குகள் எல்லாவற்றையும் நாசமாக்கத் தீர்மானித்து விட்டார்கள்!
ஆ! ஆ! இந்த சாம்ராஜ்யத்தைச் சிறுகச் சிறுக, ஆசை ஆசையாக இந்தக் கைகளால் எத்தனை ஆண்டுகள் கட்டினோம்!

அக்டோபர் 25ம் தேதி இரவு – மாரிக்கால அரண்மனையைப் போல்ஷிவிக்குகள் கைப்பற்றிய அதே இரவில் – புரட்சியின், தாய்நாட்டின் இரட்சணியக் கமிட்டி பெட்ரோகிராடில் நிறுவப்பட்டது.
இந்தக் கமிட்டி எதற்காக, சொல்லுங்கள். புதிய ஆட்சியதிகாரத்துக்கு ஆதரவாக அமைந்ததா இது?
இல்லை! இல்லை! இதோ பாருங்கள், இந்தக் கமிட்டியின் முதல் அறிக்கையை!
ருஷ்யக் குடியரசின் குடிமக்களுக்கு
அக்டோபர் 25ம் தேதி போல்ஷிவிக்குகள் புரட்சிகர மக்களின் விருப்பத்துக்கு எதிராகக் குற்றமிழைத்து பெட்ரோகிராடில் தாற்காலிக அரசாங்கத்தாரில் ஒரு பகுதியோரைக் கைது செய்திருக்கிறார்கள். ருஷ்யக் குடியரசின் தாற்காலிக அவையைக் கலைத்து விட்டுச் சட்டவிரோதமாகத் தமது ஆட்சியதிகாரம் ஒன்றைப் பிரகடனம் செய்தனர்.
போல்ஷிவிக்குகளை அங்கீகரிக்காதீர்கள்!
அவர்களது ஆணைகளுக்குப்பணியாதீர்கள்!
தாய்நாட்டையும் புரட்சியையும் பாதுகாத்திட
ஆர்த்து எழுங்கள்!

என்ன வஞ்சகம்! புரட்சியை ஆதரிப்போர் போல் அல்லவா நாடகமாடுகிறார்கள்!
இவர்கள் இன்னமும் ஏடுகளில் எழுதுவதோடு நிற்கிறார்கள். ஆனால் கேரென்ஸ்கி பெட்ரோகிராடுக்கு எதிராய் ஏற்கெனவே படைகளை அனுப்பியிருப்பதாகச் சொல்கிறார்கள்.
என்ன செய்தி? கேரென்ஸ்கி எங்கே இருக்கிறாராம்?
பெட்ரோகிராடிலிருந்து 8 கி.மீ. தூரத்துக்கு வந்து விட்டதாகச் சொல்கிறார்கள். வெற்றி வீரராக வெண்புரவியிலேறி பெட்ரோகிராடில் பவனி வரப்போவதாய் அவர் கூறியிருக்கிறாராம்!
போல்ஷிவிக்குகள் அனைவரும் தப்பித்தோம் பிழைத்தோமென்று **அரோரா** கப்பலுக்கு ஓடிவிட்டார்களாமே! நிஜமாகவா?

அக்டோபர் 30, கேரென்ஸ்கியும் ஜெனரல் கிராஸ்னோவும் தலைமை வகித்த படைகள் பெட்ரோகிராடை நோக்கி முன்னேற ஆரம்பித்தன. ஆனால் பல மணி நேரப் போராட்டத்துக்குப் பிறகு புரட்சிப் படையினரால் அவை முன்னேறவொட்டாமல் தடுத்து நிறுத்தப்பட்டன. இப்படியாக பெட்ரோகிராடு தொழிலாளி வர்க்கம் முதல் எதிர்ப்புரட்சித் தாக்குதலை முறியடித்தது. நவம்பர் முதல் தேதி கலகம் அடக்கப்பட்டது. கிராஸ்னோவும் அவரது அதிகாரிகளும் கைது செய்யப்பட்டனர். கேரென்ஸ்கி ஒரு புதிய எதிர்ப் புரட்சி அணியைத் திரட்டுவதற்கு ரகசியமாக டான் நதிக்கரைக்குத் தப்பி ஓடிவிட்டார்.

புதிய அரசு இப்போதுதான் பிறந்திருக்கிறது. ஆனால் பலப்பல எதிரிகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தோன்றி அதற்கு எதிரான சதித்திட்டங்களைப் தீட்டத் தொடங்கி விட்டனர்.
1917 டிசம்பர் 2ம் தேதி ஜெர்மனியோடு போர் நிறுத்த ஒப்பந்தத்தை ருஷ்யா அறிவித்தது.
போல்ஷிவிக்குகள் எல்லாவற்றையும் குழப்படி செய்து வைத்திருக்கிறார்கள். ருஷ்யாவில் நாம் தலையிட்டு எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்த வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் காக்கஸஸையும் டான் பகுதியையும் துரான் பிரதேசத்தையும் ஜரன்பார்க்கையும் நாம் கைப்பற்ற வேண்டும்...
அப்படியெனில் சைபீரியாவும் தூரக் கிழக்கும் எங்களுக்கு எஞ்சுகின்றன?
அற்புதமான யோசனை! நாங்கள் பெஸராபியா, உக்ரைன், கிரீமியா ஆகியவற்றைப் பிடித்துக் கொள்கிறோம்...
அதைப் பற்றி பிற்பாடு பார்ப்போம்!
பிரான்ஸ்
பிரிட்டன்
அமெரிக்கா
ஜப்பான்
நேச உடன்படிக்கை நாடுகள்
1917 டிசம்பர் 10ம் தேதி பிரிட்டனும் பிரான்சும் ருஷ்யாவை எதிர்த்து ராணுவ நடவடிக்கை எடுத்து தங்களிடையே மண்டலங்களைப் பங்கிட்டுக் கொள்ளும் ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டன. அந்த ஒப்பந்தம் ஜப்பான் மற்றும் அமெரிக்காவின் விருப்பங்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டது. ஆயினும் உலக ஏகாதிபத்தியம் இதற்கு முன் சோவியத் ருஷ்யாவுக்கு விரோதமான பகை நடவடிக்கைகளில் இறங்கியது.


நேச உடன்படிக்கை நாடுகளும் அமெரிக்க ஐக்கிய அரசும்
ஜாரிஸ்டு ஜெனரல்
கசாக்கு அட்டாமன்
பாஸ்மாச்
உக்ரேனிய தேசியவாதி

ஒன்றும் குடி முழுகிப் போய் விடவில்லை! வெளி நாடுகளில் உள்ள நமது நண்பர்கள் நம்மைக் கைவிட மாட்டார்கள்!
நேச உடன்படிக்கை நாடுகளை எதிர்த்து போல்ஷிவிக்குகள் ஒன்றும் செய்து விட முடியாது. செய்தியைக் கேட்டீர்களா? நவம்பர் 14ல் பிரிட்டனும் பிரான்சும் இத்தாலியும் டிரான்ஸ்காக்கேசியன் தேசியவாதிகளை ஆதரிப்பதென்று தீர்மானித்துள்ளன.
டிசம்பர் 9ல் பாரிசில் கூடிய நேச உடன்படிக்கை நாடுகளின் கூட்டம் உக்ரைனிலும் காக்கஸஸிலும் சைபீரியாவிலும் உள்ள போல்ஷிவிக் எதிர்ப்பு அரசாங்கங்களோடு தொடர்புகளை வலுப்படுத்திக் கொள்ளவும் அவற்றுக்குக் கடன் உதவுதற்குமான அவசியத்தையும் அங்கீகரித்தது.

ருஷ்ய முதலாளிகளின் நப்பாசைகளையும் உலக ஏகாதிபத்தியத்தின் சதிகளையும் எதிர்ப்புரட்சியாளர்களின் கலகங்களையும் புரட்சியின் எதிரிகளுடைய அனைத்து முயற்சிகளையும் தகர்த்தெறிந்து சோவியத் ஆட்சி தேசமெங்கும் வெற்றி நடை போடத் துவங்கியது. தொழிற் பிரதேசங்களில் போல்ஷிவிக் நிறுவனங்கள் பலம் மிக்கனவாய் இருந்தன, தொழிலாளி வர்க்கம் விரிவானதாய் இருந்தது; இப்பிரதேசங்களில் ஒப்பளவில் சுலபமாகவே சோவியத் ஆட்சியதிகாரம் நிறுவப் பெற்று விட்டது. ஆனால் அனைத்து ருஷ்யாவும் அவ்வளவு எளிதாகவோ, ரத்தம் சிந்தாமலோ சோவியத்துகளுடையதாகி விடவில்லை.



அக்டோபர் 25 முதல் நவம்பர் 2 வரை மாஸ்கோவில் சோவியத் ஆட்சிக்கான போர் உக்கிரமாய் நடைபெற்றது. மிகப்பெரும் இழப்புக்களை விலையாகத் தந்து தொழிலாளி வர்க்கத்தினர் வெற்றி வாகை சூடினர். எழுச்சியின் போது 1,000 பேர் வரை கொல்லப்பட்டனர்.

1917 அக்டோபர் இறுதியிலும் நவம்பர் ஆரம்பத்திலும் சோவியத்துகள் பால்டிக் பிரதேசத்தில் பாதியை தமது ஆட்சியதிகாரத்துக்குக் கீழ் கொண்டு வந்து விட்டன.

பெட்ரோகிராடில் அக்டோபர் எழுச்சி நடைபெற்ற நாட்களில் எஸ்தோனிய போல்ஷிவிக்குகள் முக்கியமான ராணுவ கேந்திரங்களைத் தங்கள் பிடிக்குள் கொண்டு வந்து, எதிர்ப்புரட்சியாளர்களின் அணி எழுச்சியுற்ற பெட்ரோகிராடுக்குள் புகுவதைத் தடுத்து நிறுத்தினர்.

லெத்திஷ் துப்பாக்கிப் படையினர் ருஷ்ய – ஜெர்மன் போர் முனையில் மிக தீரமாய்ப் போராடினர்.
அக்டோபர் புரட்சியில் பங்கேற்றனர், உள்நாட்டு யுத்தத்தில் சோவியத் ஆட்சியதிகாரத்திற்காக உறுதியோடு நின்றனர்.

பல பெரும் சோவியத் ராணுவ தளபதிகள் லெத்திஷ் துப்பாக்கிப் படையினரிடமிருந்து உதித்தவர்கள்.

7–257

கீவ் நகரில் நடந்த ஆயுதம் தாங்கிய எழுச்சியில் அங்கிருந்த ஆர்செனால் தொழிற்சாலைதான் முக்கிய நிலைக்களனாக இருந்தது. அக்டோபர் 29ம் தேதி தொழிலாளர்கள், எதிர்ப்புரட்சியாளர்களின் சில தாக்குதல்களை முறியடித்தனர்.



அங்கிருந்த ஏராளமான படைக்கலன்களைத் தாற்காலிக அரசாங்கத்தின் துருப்புக்கள் தொழிலாளர்களிடமிருந்து பிடுங்க விரும்பின. மூன்று நாட்களுக்கு இரவும் பகலுமாய் கீவ் நகரில் உக்கிரமான போர்கள் நடந்தன. ஆயினும் எழுச்சியாளர்கள் இறுதி வெற்றி அடைந்த போது இதுவரை காணாத முற்றிலும் வேறுவகைப்பட்ட சக்தி நகரத்தின் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

உக்ரேனிய தேசிய முதலாளிகள் புரட்சிப் படையினரின் வெற்றியைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். நவம்பர் 7ம் தேதி மத்திய ராடா என்ற அவை தேசியவாதிகளின் செல்வாக்குக்கு உட்பட்ட படைகளின் துணை கொண்டு சட்டவிரோதமாய் நகரின் ஆட்சியைப் பிடித்துக் கொண்டது. மூன்று மாத காலத்துக்குப் புரட்சிகரத் தொழிலாளர்களும், படையாட்களும் கீவ் நகரிலும் உக்ரைன் பூராவிலும் சோவியத் ஆட்சியதிகாரத்தை நிறுவும் பொருட்டு அளவிட முடியாத இழப்புக்களுக்கு ஆளாயினர்.

அவை பலதரப்பட்டவையாயிருந்த போதிலும் ஒரு விஷயத்தில் ஒன்றுபட்டிருந்தன — அதாவது சரண்டலுக்கு எதிராய் சோவியத் ஆட்சியதிகாரத்துக்காகக் கிளர்ந்தெழுந்த மக்களைக் கடுமையாக வெறுத்து அவர்களைத் தாக்குவதில் இவை யாவுமே ஒன்றுபட்டிருந்தன.

சோவியத் ஆட்சி பாட்டாளி வர்க்கம், முதலாளி வர்க்கம் ஆகிய இரண்டுக்கும் இடையிலான போராட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டது. அதே சமயம் விரிந்து பரந்த ருஷ்யாவில் கணிசமான பிரதேசங்களில் அன்று தந்தைவழி, நிலப்பிரபுத்துவ உறவுகள் ஆதிக்கத்தில் இருந்தன. தொழில் துறை இங்கு ஆரம்ப நிலையில்தான் இருந்தது. மத்திய ஆசியாவும் கஸாக்ஸ்தான் இம்மாதிரியான நிலைமையில் இருந்தன. ருஷ்யாவின் எல்லைப் பகுதிகளில் புரட்சி எப்படி நடந்தேறியது?
1917 அக்டோபர் 25 வரை
மதத்தலைவரான முல்லா
நிலப்பிரபு
ருஷ்ய கவர்னர்
தாஜிக்கிஸ்தானிலும் துருக்மேனியாவிலும் அநேகமாக நூற்றுக்கு நூறு பேர் எழுத்தறியாதோராய் இருந்தனர்.
கஸாகியர்களில் நூற்றுக்கு இரண்டு பேர் மட்டுமே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்.
கிர்கீசியர்கள் வரிவடிவ மொழியே இல்லாதோராய் இருந்தார்கள்.
ஜாராட்சி உங்களை மிக இழிவான வறுமையிலும் உரிமையற்ற நிலையிலும் வைத்திருந்தது. சோவியத் ஆட்சியதிகாரம் உங்களை ஒடுக்குமுறையிலிருந்து விடுவிக்கிறது, உங்களுக்கு நிலம் அளிக்கிறது, அந்த நிலத்தில் சுதந்திரமாக உழைப்பதற்கான உரிமையையும் வழங்குகிறது.

1917 அக்டோபர் 25க்குப் பிறகு
வேலைசெய்வதை நிறுத்தியாவிட்டாய்? உனக்கும் புரட்சியா வேண்டும்? ருஷ்யர்கள் உனது பரம வைரிகள் என்பதை மறந்துவிட்டாயா? உனக்குப் புரட்சி தானே வேண்டும்? இதோ, நான் தருகிறேன்!
இஸ்லாமின் மீது நமக்குள்ள பெரு நம்பிக்கையைப் போல்ஷிவிக்குகள் சிதைக்க நினைக்கிறார்கள்! அல்லா உங்களைச் சபித்து விடுவார்!
இதுவரை இருந்த நிலவரத்தில் என்ன கோளாறு? உனக்கு என்னால் ஆன எல்லா நன்மையும் செய்து உதவி இருக்கிறேன். கண்டதையும் யோசிக்காதே! போய் உன் வேலையைப் பார்!
திரும்பவும் ஒரு நொடியில் நீங்கள் எல்லாரும் என் முதுகில் ஏறி சவாரி செய்வீர்களோ என்று தான் யோசித்து கொண்டிருக்கிறேன்.
போல்ஷிவிக்குகள் நம்மையெல்லாம் ருஷ்யக் கடவுளைத் தொழச் செய்தாலும் செய்வார்கள்!
1917 நவம்பர் 2ம் தேதி மக்கள் கமிசார் அவை "ருஷ்யாவையும் கீழ்த்திசையையும் சேர்ந்த உழைக்கும் மக்களான அனைத்து முஸ்லீம்களுக்கும்" என்று ஒரு வேண்டுகோளை வெளியிட்டது. முஸ்லீம்களின் தேசிய மற்றும் கலாசார நிறுவனங்கள், பழக்கவழக்கங்கள் நம்பிக்கைகள் ஆகிய எல்லாவற்றுக்கும் தங்குதடையற்ற முழு சுதந்திரம் உண்டென அது பறைசாற்றியது, சொந்த வாழ்வை விருப்பம் போல் நடத்த முழுச் சுதந்திரத்துக்கு உத்தரவாதம் செய்தது.

புதிய யுகத்தின் புத்தாண்டு நெருங்கி வந்து கொண்டிருந்தது.
ருஷ்யாவில் நடைபெற்ற புரட்சிக்குப் பின் முதலாவது ஆண்டு – 1918...
இன்னும் சில நாட்களுக்குப் போதுமான எரிபொருள்தான் எஞ்சியுள்ளது. அதன் பிறகு தொழிற்சாலையை மூட வேண்டியதுதான். ஆனால் புத்தாண்டுப் பரிசாக பால்டிக் கப்பற்படை தனது போர் கப்பல்களின் இருப்பிலிருந்து அனுப்பிய 3,000 டன் நிலக்கரி வந்து சேர்கிறது.
"பிரஜைகளே! பழைய உடைமையாளர்கள் ஓடிப்போய் விட்டனர். அவர்கள் ஏராளமான பரம்பரைப் பொக்கிஷங்களை விட்டுச் சென்றுள்ளனர். அவற்றை ஒன்றும் செய்து விடாதீர்கள், ஒரு துரும்பைக் கூடத் தொடாதீர்கள். நினைவுச் சின்னங்களையும் கட்டிடங்களையும் கலைப்படைப்புக்களையும் வரலாற்று ஏடுகளையும் பத்திரமாகக் காப்பாற்றுங்கள். அவையாவும் உங்களுடைய வரலாறும் பாரம்பரியப் பெருமையும் ஆகும்."
இனிமேல் ஏதொன்றும் எவருக்கும் உரித்தான உடமை அல்ல. ஆதலால் என் மனைவிக்கு சிறந்த புத்தாண்டுப் பரிசாக இதை எடுத்துச் செல்லலாம்.
இவையெல்லாம் எந்தத் தனிநபருக்கும் அல்ல, மக்களாகிய நம் அனைவருக்கும் உரியவை. பிரசுரத்தை படிக்கவில்லையா நீ?

சோவியத்துகள் அருமையான புத்தாண்டுப் பரிசைப் பெறப் போகின்றன! ருஷ்யப் பேரரசுக்கு விசுவாசமானவர்கள் தங்கள் அணிகளை ஒன்று திரட்டிக் கொண்டிருக்கின்றனர். நமக்கு வெளிநாடுகளின் பக்க பலமும் இருக்கிறது! 1917ம் ஆண்டு போல்ஷிவிக்குகளின் இறுதி ஆண்டு என்று கூறி பானம் அருந்துவோமாக!
பத்திரிகை படித்தாயா? கூட்டணி நாடுகள் இன்னும் மௌனம் சாதிக்கின்றன. அவர்கள் நமது போர் நிறுத்த பிரேரணைக்கு இன்னும் பதில் சொல்லவில்லை!
ஆம்! சமாதானமே ருஷ்ய மக்களுக்கு உகந்த புத்தாண்டுப் பரிசு. உண்மையில் எல்லா மக்களுக்குமே, ஜெர்மானியர்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் ஆகிய எல்லோருக்கும் சமாதானமே சிறந்த பரிசு...
நிதி இலாகா எழுத்தர்களாகிய நாங்களும் கூட போல்ஷிவிக்குகளுக்கு புத்தாண்டுப் பரிசு அளிக்கப் போகிறோம். வேலை நிறுத்தம் செய்யப் போகிறோம்!
அப்பா! இன்று விடுமுறை நாள் அல்ல. நீங்கள் ஏன் வேலைக்குப் போகவில்லை?
1918ம் ஆண்டு நம்பிக்கையும் கவலையும் நிறைந்த ஆண்டாக நெருங்கி வந்தது...

தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும்
திறனற்ற ஒரு புரட்சி எதற்கும்
உதவாத ஒன்று.

வி. இ. லெனின்



அன்றாடத் தேவைகளுக்குக் கூடப் பஞ்சம்,
ரொட்டி,
தீப்பெட்டி,
சோப் ஏதுமில்லை...
புதிய ஆட்சியாளர்கள் பொது மக்களின் தேவைப்பொருள்கள் கிடைக்க வழி செய்தாக வேண்டும்.
விதைப்பதற்கு விதை இல்லை; கலப்பை இல்லை; கால்நடை இல்லை ...
சோவியத் ஆட்சியின் முதல் ஆண்டு...
ருஷ்யாவுக்கு உணவு கிடைக்கச் செய்வது எப்படியாம் ?!
தேசத்தில் கோடிக்கணக்கான பேர் எழுத்தறிவில்லாதவர்களாக இருக்கையில்
மக்களுக்குப் புதய வாழ்க்கை முறையை போதிப்பது எப்படி ?
இப்போது நம்முடைய பிரதான பணி மக்களின் எழுத்தறிவின்மையை அடியோடு அகற்றி அவர்களது கலாசாரத் தரத்தை மேம்படுத்துவதுதான்.
20.
+315

பெட்ரோகிராடு ஆலைகளில் நாலுக்கு ஒன்று வீதம் மூடப்பட்டுக் கிடக்கிறது.
கச்சாப்பொருளும் இல்லை;
எரிபொருளுமில்லை.
தொழில்களை மீண்டும் இயங்கச் செய்வதுதான் இப்போது நமது பிரதான பணி.
எங்கிருந்து தொடங்குவது?
அரசு நிர்வாகம் பற்றிய பிரச்னையே இன்னும் தீர்மானமாகாத போது அரசின் கடமைகளைப் பற்றிப் பேச இடமேது ?
போல்ஷிவிக்குகள் அரசியல் நிர்ணய சபை ஒன்று கூட்டப் போவதாக வாக்களித்திருந்தார்களே. அதை ஏன் செய்யவில்லை ?

தேர்தல் முடிவுகளின்படி ருஷ்யாவின் பல்வேறு அரசியல் கட்சிகளும் அரசியல் நிர்ணய சபையில் அங்கம் பெற்றன. தொழில் கேந்திரங்களில் போல்ஷிவிக்குகள் அபரிமித வெற்றி அடைந்தனர். தொழிலாளி வர்க்கத்தின் பெருந்திரள் மக்களும் படையாட்களில் பாதிப் பேரும் போல்ஷிவிக்குகளை ஆதரித்தனர்.

1918 ஜனவரி 5ம் தேதி சோவியத் அரசாங்கம் பெட்ரோகிராடில் அரசியல் நிர்ணய சபையைக் கூட்டிற்று.

அரசியல் நிர்ணய சபையிலிருந்து போல்ஷிவிக்குகள் வெளிநடப்புச் செய்தனர். அதன் பின் அச்சபை எதற்கும் உதவாத ஒன்றாகியது. அரசியல் நிர்ணய சபையைச் சேர்ந்த பிரதிநிதிகளை "வேறு ஏதோ ஒரு உலகத்தை சேர்ந்தோராவர்" என்று லெனின் குறிப்பிட்டார், ஜனவரி 5ம் நாள் பயனற்று விரயமாகிய நாளாகும் என்றார்.

1918 ஜனவரி 10ம் தேதி சோவியத்துகளின் மூன்றாவது அனைத்து ருஷ்யக் காங்கிரஸ் ருஷ்யாவைத் தொழிலாளர்கள், படையாட்கள், விவசாயிகள் பிரதிநிதிகளது சோவியத்துகளின் குடியரசு என்று பிரகடனம் செய்தது, அரசு அதிகாரங்களையும் இந்த சோவியத்துகளிடம் ஒப்படைத்தது. அந்தக் காங்கிரஸ் இதற்கு முன் கூட்டப்பட்ட அரசியல் நிர்ணய சபையை விட இரண்டு மடங்கு அதிகப் பிரதிநிதிகளைக் கொண்டிருந்தது.

நமக்குத் தேவை உணவு, எரிபொருள்...
போக்குவரத்து வசதி, இயந்திரக் கருவிகள், தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள்...
எல்லாவற்றுக்கும் மேலாக நமது தேசத்திற்குச் சிறிது அவகாசம் தேவை. யுத்தத்தால் நலிவுற்றுச் சோர்ந்த மக்கள் மூச்சு விட சமாதான இடை நேரம் வேண்டுமென ஏங்குகிறார்கள்.
சோவியத்துகள் சமாதானத்துக்காக முன்மொழிந்துள்ளன.
யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் எல்லா அரசுகளையும் கேட்டிருக்கிறது. ஆனால் நேச உடன்படிக்கை நாடுகள் பேச்சு வார்த்தை நடத்த மறுத்து விட்டன. பிரதேசப் பிடிப்போ இழப்பீடுகளோ இல்லாத சமாதானத்தை முன்மொழிந்த சோவியத்துகளின் முன் ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகள் கொள்ளைக் கார கோரிக்கைகளை எழுப்பினர்.
பிரெஸ்ட் - லித்தோவ்ஸ்கில் சோவியத்துகள் ஜெர்மானியர்களோடு சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவது பற்றிக் கேள்விப்பட்டாயா?
நேச உடன்படிக்கை நாடுகளுடன் சோவியத்துகள் சமாதானம் பற்றிப் பேசியது உண்மைதான். ஆனால் அந்நாடுகள் அதற்குச் செவிசாய்க்கவில்லை.
அப்படிச் செய்தால் கூட்டாளிகளைக் காட்டிக் கொடுத்ததாக ஆகி விடுமே!
கனவான்களே! அரசியல் பேசியது போதும். கெய்ஸர் காத்திருக்கட்டும், தேநீர் ஆறிப்போகும்.

எழுதப்படிக்கத் தெரிந்தவராக இருக்கிறீர்கள், செய்திப்பத்திரிகை படிக்கிறீர்கள். போர்முனையிலிருந்து என் மகன் எப்போது திரும்பி வருவான் என்று சொல்லுங்கள். சமாதானம் செய்து கொள்ள ஏன் இவ்வளவு தாமதம்?
ஜெர்மானியர்களோடு சமாதானத்துக்கு நாங்கள் ஒருபோதும் ஒப்ப மாட்டோம்! அவர்கள் ருஷ்யாவில் பாதியை அல்லவா விலையாகக் கேட்கிறார்கள்!
அப்பா! உங்கள் ஆவேசப் பேச்சுக்களை நிறுத்துங்கள். எப்படி இடைவிடாது நாம் சண்டை போட்டுக் கொண்டே இருக்க முடியும்? நமது பழைய சேனைகள் நிலைகுலைந்திருக்கின்றன. அவற்றுக்குப் பதிலாக நம்மிடம் புதிய படை ஏதும் இல்லை; இந்த நிலையில் சிறிது ஓய்வு தேவை.
சோவியத் அரசாங்கத்தை ஒரு பெரும் கேள்வி எதிர்நோக்குகிறது: கடுமையான நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொண்டு சமாதானம் செய்து குடியரசைக் காப்பாற்றுவதா? அல்லது தொடர்ந்து போரில் ஈடுபட்டு சோவியத் அரசு கவிழ்க்கப்படும் படியான ஆபத்தில் சிக்கிக் கொள்வதா?
சாதாரண மனிதர்கள், தொழிலாளர்கள், எதிரிகள் எல்லாரும் சமாதானத்தைப் பற்றியே பேசினார்கள்...
அதுதான் சரி! ஜெர்மானியர்கள் போல்ஷிவிக்குகளைச் சமாளிப்பார்கள், பிறகு நாம் நிலைமையை ஒழுங்கு செய்வோம்!
போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுவதை நாம் எப்பாடுபட்டேனும் தடுக்க வேண்டும்!

மார்ச் மாதம் 3ம் தேதி பிரெஸ்ட்-லித்தோவ்ஸ்க்கில் சோவியத் பிரதிநிதிகள் கொள்ளைக்காரத்தனமான சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

காரியாம்சத்தில் பெட்ரோகிராடு முற்றுகைக்கு உட்பட்டிருந்ததால் லெனின் தலைமையிலான சோவியத் அரசாங்கம் 1918 மார்ச் 11ம் தேதி மாஸ்கோவுக்கு மாற்றப்பட்டது.
மாஸ்கோ சோவியத் அரசின் தலைநகராயிற்று. லெனின் அந்த நேரத்தில் எழுதினார்: "சமாதானத்துக்கான ஷரத்துக்கள் சகிக்க முடியாத அளவுக்குக் கடுமையானவை தான் எனினும் வரலாறு தன்னை எப்படியும் சரியாக உருவாக்கிக் கொள்ளும்... என்னதான் கடுமையான சோதனைகள் ஏற்பட்டாலும் வருங்காலம் நம்முடையதே!"

8-257

அறக்கட்டளைக் கழகம்
இது என்ன மாதிரியான கழகம்?
தர்ம காரியங்களுக்கான ஸ்தாபனம் என்று கூறப்படுகிறது. ஆனால் ராணுவ அதிகாரிகள் மட்டுமே உள்ளே போய் வருகிறார்கள்.
உதவி தேவைப்படுகிற ராணுவ அதிகாரிகளுக்கு நமது கழகம் உதவுகிறது. ஒரு கோப்பை சூப், ஒரு பாக்கெட் சிகரெட்... கவலைப்படாதீர்கள்.
படை அதிகாரிகளே! உங்களுக்கு இப்போது பணமும் ஆயுதமும் தரப்படும். நீங்கள் எல்லோரும் போல்ஷிவிக்குகளிடமிருந்து ருஷ்யாவைப் பாதுகாக்கப் போகிற சேனையோடு சேர்ந்து கொள்வதற்காக டான் பகுதிக்கு அனுப்பப்படுகிறீர்கள்.

கழகம்
இது ஏதோ தர்ம ஸ்தாபனம் என்று போல்ஷிவிக்குகள் நினைத்துக் கொள்ளட்டும்.
உண்மையில் இது படைத் திரட்டு மையம். தலைமறைவாகச் செயல்பட்டு ஆட்களைச் சேர்க்கிறது.
அதிகாரத்தையும் பண பலத்தையும் எல்லாச் சலுகைகளையும் இழந்து விட்ட பழைய சுரண்டல்காரர்களால் தமது இந்த நிலையை ஏற்றுக் கொள்ள இயலவில்லை. புரட்சியின் பகைவர்கள் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் நாசவேலைகளில் ஆரம்பித்து மேலும் படுநாசகரமான சதிச் செயல்களில் ஈடுபட்டனர்.
வஞ்சகப் படுகொலை...
திரைமறைவு நாசவேலை...
... சதிகள், கலகங்கள், சோவியத் எதிர்ப்புப் பிரசாரம்.


அதே போதில் நாட்டின் கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் எதிர்ப்புரட்சி ராணுவம் பெருமளவில் உருவாக்கப்பட்டு வந்தது. முடியாட்சியின் ராணுவ அதிகாரிகள், அரசாங்க அதிகாரிகள், முதலாளி வர்க்கத்தார், நிலப் பிரபுக்கள் முதலியோர் நாட்டின் மையத்திலிருந்து வெளியேறி எல்லைப்புறப் பகுதிகளுக்கு ஓடி, பூர்ஷ்வா தேசியவாதிகளுடன் சேர்ந்து கொண்டனர்.
நாங்கள்தான் சட்டம், ஒழுங்கின் மெய்யான பாதுகாவலர்கள்.
நேச உடன்படிக்கை நாடுகளுடன் எந்த உறவும் வைத்துக் கொள்ளாதீர்!
இந்த ஜெர்மானியரின் தலைமைக்குக் கீழ்ப்பட்டுச் செயல்பட மாட்டீர் என நம்புகிறேன்.
கனவான்களே! நீங்கள் இதெல்லாம் குறித்து மனதை அலட்டிக் கொள்ளாதீர்கள்...
ஜெர்மன் கூட்டணி
நேச உடன்படிக்கை நாடுகள்
லெனினின் வார்த்தைகளில் கூறினால், உலக ஏகாதிபத்தியம் ருஷ்யாவில் உள்நாட்டு யுத்தத்தை உசுப்பி விட்டது. பிரிட்டன் மட்டும் அப்போது 89.7 மில்லியன் பவுன் வரை சோவியத் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காகச் செலவிட்டது.

வெள்ளை நிறமே சட்டத்தின் சின்னம் – புரட்சியின் நிறமான சிகப்புக்கு எதிரானது.
அது சரி... எங்கிருந்து நமக்கு பணமும் ஆயுதங்களும் கிடைக்கும்?
டான் பகுதி, குபான் பிரதேசம், தெற்கு யூரல்ஸ், சைபீரியா ஆகிய இடங்கள் எதிர்ப்புரட்சியின் ஆதரவுத் தளங்கள் ஆயின. இவை எல்லாம் சேர்ந்து **"வெள்ளை இயக்கம்"** எனப்படும் அணியை உருவாக்கிக் கொண்டன.
புரட்சி தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியிருந்தது. புரட்சிக்கு ஒரு சேனை தேவைப்பட்டது.
ТЫ
ЗАПИСАЛСЯ ДОБРОВОЛЬЦЕМ?
40,000 பெட்ரோகிராடு தொழிலாளர்கள் சேர்ந்துள்ளனர்.
மாஸ்கோவிலிருந்து 60,000 பேர் சேர்ந்திருக்கிறார்கள். இன்னும் பல இடங்களில் சேர்கிறார்கள்... செஞ்சேனை வளர்ந்து பெரிதாகி வருகிறது!
பெட்ரோகிராடு அருகில் தொழிலாளர், விவசாயிகள் படை முதல் வெற்றியைப் பெற்ற நன்னாளான **பிப்ரவரி 23ம் தேதி செஞ்சேனையின் பிறந்த நாளாகப்** புகழ் பெற்று விட்டது. 1918 கோடையிலும் இலையுதிர்காலத்திலும் செஞ்சேனையில் 8,00,000க்கும் அதிகமானோர் சேர்ந்தார்கள்.

1918 ஜூலை 10ம் தேதி சோவியத்துகளின் ஐந்தாவது அனைத்து ருஷ்ய காங்கிரஸ் கட்டியமைக் கப்பட்டு வந்த செஞ்சேனையை அதிகார பூர்வமாய் நிறுவியது.
படையாள் தோழர்களே! நம்மிடம் போதுமான அளவு படைக்கலன்களும் சாதனங்களும் இல்லாமல் இருக்கலாம். நம்மிடம் பிரிட்டிஷ் டாங்கிகளோ, ஜெர்மன் விமானங்களோ இல்லை. நம்மிடம் ஆறு பேருக்கு ஒரு துப்பாக்கிதான் இருக்கிறது. எனினும் எதிர்ப்புரட்சியை நாம் நொறுக்கி விடுவோம். ஏனெனில் நாம் தொழிலாளிகள், விவசாயிகளின் ஆட்சியதிகாரத்துக்காகப் போராடுகிறோம்.
... உன் கைகளில் இருக்கும் துப்பாக்கி ஒடுக்கப்பட்ட எல்லாரையும் உழைக்கும் மக்கள் அனைவரையும் காப்பாற்றும் ஆயுதம்...
... பகைப் பிரதேசத்தில் ஊடுருவிச் செல்கையில் துப்பாக்கியைப் பாதுகாப்பதில் கவனமாக இரு...
... ரோந்துப் பணிகளின் போது துப்பாக்கியின் மேல் கவனமாக இரு...
ஒரு துப்பாக்கி கூட இல்லையேல் நீ என்ன போர்வீரன்? கையில் ஆயுதமில்லாத நிலையில் கோழை உங்களிலிருந்து ஓடி ஏனையோரிடம் பீதியைப் பரப்பும் போது நீ நகைப்புக்கு இடமாவாய். ஆயுதம் ஏந்தி பின்வாங்கும் போது கடைசி தோட்டா இருக்கிறவரை போராடு. உன்னைத் தற்காத்துக் கொள்ளும் பொருட்டு நீ பின்வாங்க நேரிட்டாலும் உன்னால் ஆயிரக்கணக்கான மக்களை அர்த்தமற்ற சாவிலிருந்து காப்பாற்ற முடியும்...
(1918ம் ஆண்டுப் பிரசுரம் ஒன்றிலிருந்து.)
தோழரே! துப்பாக்கியைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொள்ளுங்கள்...

சேனையைத் திரட்டுவதில் சோவியத்துகள் தங்கள் சக்தி முழுவதையும் செலவிடுகின்றன. அவர்களுடைய சோஷலிசத்தைக் கட்டுவதற்கு அவர்களுக்கு ஏது அவகாசம் ?
நீங்கள் சொல்வது உண்மை அல்ல. சோவியத்துகளின் ஐந்தாவது காங்கிரஸ் சோஷலிச ஜனநாயகத்துக்கான அடித்தளத்தை நிறுவும் முதல் சோவியத் அரசியல் சட்டத்தை அங்கீகரித்திருக்கிறது.
சோவியத்துகளின் காங்கிரஸ் நடைபெறும் மண்டபத்தில்
உழைக்கும் மக்களாகிய எங்களுக்கு உத்தரவாதம் செய்யப்பட்டிருக்கும் உரிமைகளுக்காகவும் சுதந்திரங்களுக்காகவும் வாக்களிக்கிறேன்!
எல்லா தேசிய இனங்களின் சமத்துவத்துக்காக வாக்களிக்கிறேன்!
நமது நாட்டின் எல்லா இனத்தோரின் சோஷலிச எதிர்காலத்துக்காக வாக்களிக்கிறேன்!
முதல் சோவியத் அரசியல் அமைப்புச் சட்டத்தை ஏற்று காங்கிரசின் பிரதிநிதிகள் அனைவரும் ஏகமனதாக வாக்களிக்கிறார்கள்.

அந்நிய ராணுவத் தலையீடு இல்லாதிருந்தால் சோவியத் அரசால் உள்நாட்டு எதிர்ப்புரட்சியை ஒப்பளவில் விரைவாகவே முறியடித்திருக்க முடியும்.

விரைவிலேயே நேச உடன்படிக்கை நாடுகள் சோவியத் ருஷ்யாவுக்கு எதிராக நேரடி ராணுவத் தலையீட்டை ஆரம்பித்தன.

1918 மார்ச் 9ம் தேதி 200 பிரிட்டிஷ் படையாட்கள் மூர்மன்ஸ்க்கில் இறங்கினர். தலையீட்டுக்காரர்களின் முதல் பிரிவுடன் பெரிய பிரிட்டிஷ், அமெரிக்கப் படைவரிசைகளும் சேர்ந்து கொண்டன. ஏப்ரல் 5ம் தேதி முதல் ஜூலை 6ம் தேதி வரை 75,000 ஜப்பானியர் களும் 12,000 அமெரிக்கர்களும் விளாதிவஸ்தோக்கில் இறங்கினர்.

1918 மே 25 முதல் 30ம் தேதிக்குள் பல கிழக்கு ருஷ்ய நகரங்கள் கலகம் புரிந்த செக்கோஸ்லொவாக் படையினரால் கைப்பற்றப்பட்டன. 50, 000 செக் மற்றும் ஸ்லொவாக் யுத்தக் கைதிகளைக் கொண்டு ஜார் மன்னர் காலத்தில் முதல் உலக மகாயுத்தத்தில் ஈடுபடுவதற்காக ஒரு படைப்பிரிவாக அமைக்கப்பட்ட படை அது.

மேற்கு நோக்கிய பாதை போர்முனைகளால் துண்டிக்கப்பட்டிருந்ததால் இவர்களை விளாதிவஸ்தோக் வழியே தாயகத்திற்கு அனுப்ப சோவியத் அரசாங்கம் விரும்பியது.

கலகத்தில் பங்கெடுத்துக் கொள்ள முடியாது என்று மறுத்து விட்ட செக் படையாட்கள் எழுதிய கடிதத்தை யூரால்ஸ்கி ரபோச்சி செய்திப்பத்திரிகை பிரசுரித்தது.


1918 கோடையில்
சோவியத் ருஷ்யாவின்
முக்கால் பகுதி பரப்பு
பகைவர்களால் பிடிபட்டிருந்தது.
சோவியத் குடியரசு நாற்புறமும்
எதிரிப் படைகளால் சூழப்
பட்டிருந்தது.
பெட்ரோகிராடு
கெய்ஸருக்கு விசுவாசமுள்ள ஜெர்மானியர்கள், பெட்லூராவின் கையாட்கள்
மாஸ்கோ
பிரிட்டிஷ் டாங்கிகள், வெள்ளைக் கசாக்குகள், துருக்கியர்கள்
பிரிட்டிஷ்காரர்கள், அமெரிக்கர்கள், வெள்ளைப்படையினர்
1,50,000
ராணுவத் தலையீட்டுக் காரர்கள் சைபீரியாவிலும் தூரக் கிழக்கிலும் புரட்சியை அடக்கி ஒடுக்குவதில் முனைந்திருந்தார்கள்.
ஜப்பானியர்கள், அமெரிக்கர்கள், கல்ச்சாக்கின் கையாட்கள்
1918
மத்தியில்
சோவியத்துகளுக்கு எதிரான அயல்நாட்டு, உள்நாட்டு சக்திகள் ஒன்றிணைந்து சோவியத் ருஷ்யாவுக்கு எதிரான ஆயுதக் கலகத்தைத் தொடங்கினர். பகைவனை எதிர்த்துப் போராடுவதற்கு அனைத்து சக்திகளையும் திரட்டுவது அவசியமாயிற்று.


தலையீட்டுக்காரர்களின் சேனைகள் சோவியத் பிரதேசத்துள் படையெடுத்தன.
கொடிய பயங்கரமும் வன்முறையும் தான்தோன்றித்தனமான ஆட்சியும் தலைவிரித்தாடின...
அர்காங்கெல்ஸ்க் பகுதியில் மட்டும் ஐவரில் ஒருவர் வீதம் குடிமக்கள் சிறைக் கூடங்களிலும் காவல் முகாம்களிலும் அடைக்கப்பட்டனர்.
இங்கே நீங்கள் பத்திரமாக இருக்கலாம்!

டான் பகுதியில் சாதாரண குடிமக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். உயிர் தப்பியோரில் ஒருவர் தான் கண் கொண்டு கண்டதை இவ்வாறுதான் சித்திரித்தார்.
இந்த ருஷ்யர்களுக்குச் சட்ட-ஒழுங்கு பற்றிய அறிவே இல்லை. நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேனே: 8 பேரை வரிசையாக நிறுத்தி வைத்துச் சுட வேண்டும், 12 பேர் பார்த்து கொண்டு காத்திருக்க வேண்டும்.
தூரக் கிழக்கில் உள்நாட்டு யுத்தத்தின் போது ஜப்பானிய ராணுவத் தலையீட்டுக்காரர்கள் உள்ளூர் தலைமறைவு இயக்கத்தின் அமைப்பாளராக இருந்த 26 வயதான செர்கேய்லாசோ என்ற போல்ஷிவிக்கையும் அவரது இரு தோழர்களையும் ரயில் எஞ்சின் உலையிலே தள்ளி சுட்டெரித்தனர்.
இப்போது செர்கேய்லாசோ எங்கிருக்கிறார் என்ற விவரம் எங்களுக்குத் தெரியாது என்று செய்தி ஏடுகளுக்கு அறிவித்துவிடு.
ஆமாம்... செத்த பிறகு போல்ஷிவிக்குகளின் ஆத்மாக்கள் எங்கே போகின்றனவோ, நமக்கு என்ன தெரியும்?

1918 ஆகஸ்ட் 30ம் தேதி, மாஸ்கோ
லெனினைக் கொலை செய்து விட்டார்களா ?!
இரவு 7 மணிக்கு லெனினைக் கொலை செய்ய முயற்சி நடந்தது. மிகெல்ஸன் ஆலையின் முற்றத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தின் முடிவில் இது நடைபெற்றது. அவர் படுகாயம் அடைந்தார். ஆனல் டாக்டர்களால் எப்படியோ அவர் உயிரைக் காப்பாற்ற முடிந்தது.
எதிர்ப்புரட்சியாளர்கள் சோவியத் ஆட்சியை எதிர்த்து வெளிப்படையான ஒரு யுத்தத்தை தொடுத்தது மட்டுமெல்லாமல், உள்நாட்டில் பயங்கரவாத நடவடிக்கைகளைத் திட்டமிட்டு நடத்தினர்.
லெனினைக் காரில் ஏற்றி வழியனுப்ப நாங்கள் வந்தோம். மூன்று முறை துப்பாக்கி வெடித்தது. இரண்டு குண்டுகள் லெனினின் மீது பாய்ந்தன. மூன்றாவது என் மீது...
கூட்டத்தில் பங்கேற்றவரான பொப்போவா

அப்போது, லெனினுக்கு மூன்று அடி தூரத்தில் ஒரு பெண் கைத்துப்பாக்கியுடன் இருந்ததைப் பார்த்தேன். அவளைப் பிடிக்க முயன்றபோது அவள் துப்பாக்கியை வீசி எறிந்து விட்டுக் கூட்டத்துக்குள் ஓடி மறைந்தாள்.
கில் – லெனினின் கார் ஓட்டுநர்
நாங்கள் அவளை மடக்கிப் பிடித்து எங்கள் தொழிற்சாலைக்கு கொண்டு வந்தோம். அவள் முறைப்படி விசாரிக்கப்படுகிறாள்; கும்பல் ஆட்சிக்கு நாங்கள் இடமளியோம்.
கூட்டத்தில் பங்கேற்ற படுலின்
ரகசியமாகவும் வஞ்சகமாகவும் செயல் பட்டனர்...
28 வயதான ஃபாய்னு கப்லான் என்கிற பயங்கரவாதி ஒருத்தி லெனினைக் கொலை செய்ய முயன்றாள். அரசியல் காரணங்களுக்காக அவரைக் கொலை புரிய வேண்டுமெனச் சுட்டதாக அவள் கூறினாள்.
லெனினைக் கொல்ல முயன்றது இந்தக் கப்லான் மட்டுமல்ல
விசாரணை நீதிபதி கூறுகிறார்
கட்சியிலும் அரசிலும் பிரதான அங்கம் வகித்த உரிட்ஸ்கி என்பவரை அதே நாளன்று பெட்ரோகிராடில் ஒரு பயங்கரவாதி கொலை செய்தான். பயங்கரவாதக் கொலைகளின் மூலம் சோவியத் அரசைத் தலைமையிலிருந்து அகற்ற எதிரிகள் முயன்றனர்.

9–257


உலகின் முதல் சோஷலிஸ்ட் அரசின் சேனை கட்டியமைக்கப்பட்டது அமைதியான சூழ்நிலையில் அல்ல, பகைவர்களது குண்டுத் தாக்குதல்களுக்கு இடையே, நீண்ட பல ஆண்டுகளில் அல்ல, மிகக் குறுகிய காலத்தில்.
நான் படித்து ஒரு விவசாய நிபுணனாக விரும்பினேன்.
நான் ஒரு ஆசிரியராக வேண்டுமெனக் கனவு காண்கிறேன்.
பிற்பாடு, நிச்சயம் நான் படித்துப் பட்டம் பெற்று டாக்டர் ஆவேன்.
சோவியத்துகள் தங்களுக்கு வேண்டிய ராணுவத் தளபதிகளைத் தாங்களே பயிற்றுவித்துக் கொள்வதென முடிவு செய்தன. பழைய ராணுவ நிபுணர்கள் சோவியத்துகளின் பக்கம் சேரமாட்டார்களே, அதனால்.
முன் ஜாரிஸ்டு ராணுவ அதிகாரிகளாய் இருந்தோரைத் தம் பக்கம் சேர்த்துக் கொள்ள சோவியத்துகள் அஞ்சுகின்றன!

உங்கள் கனவுகளெல்லாம் நிச்சயம் நனவாகும். ஆனால் தற்சமயம் நாம் பயில வேண்டுவது ராணுவ விவகாரங்கள்தான்.
தொழிலாளர்களும் விவசாயிகளும் கனவு கண்ட எதிர்காலத்தை உத்தரவாதம் செய்வதற்கு நன்கு பயிற்சி பெற்றுத் தேர்ந்த ராணுவம் மிகவும் அவசியம். இதன் பொருட்டு ராணுவப் பள்ளிகளும் பயிற்சி வகுப்புகளும் அகாடமிகளும் நிறுவப் பட்டன.
முன்பிருந்த ஜாரிஸ்டு ராணுவ அதிகாரிகளையும் சோவியத் அரசாங்கம் தன்வசம் ஈர்த்துக் கொண்டது.
முன்னாள் ராணுவ அதிகாரிகள் நிபுணர்கள் அனைவரும் தேர்ச்சியும் திறனுமுள்ள செஞ்சேனையைக் கட்டியமைப்பதற்காக முன்வருமாறு அழைக்கப்படுகிறார்கள்!
படை அதிகாரியால் எவ்வாறு படையாட்களின் நம்பிக்கையைப் பெற முடியும்? நேர்மையாக இருப்பதன் மூலம், தனது பணிகளை நன்கு தெரிந்து வைத்திருப்பதன் மூலம், தனது படையாட்களை நேசிப்பதன் மூலம், அவர்களது தன்மான உணர்வை மதிப்பதன் மூலம் பெற முடியும்.
படைத் தலைவனாயிருப்பது எனது தொழில் முறைப் பணி, எனது உத்தியோகம். ராணுவத்துக்கு வெளியே எனக்குத் தொழில் ஏதும் தெரியாது. நான் என் தாய்நாட்டை நேசிப்பவன், ஆனால் என்னை அவர்கள் நம்புவார்களா?
செஞ்சேனை அமைக்கப்பட்ட ஓராண்டுக்குப் பிறகு அதில் முன்னர் ஜாரிஸ்டு ராணுவத்தில் தொழில் முறையில் பணி புரிந்த சுமார் 35,000 அதிகாரிகளும் ஜெனரல்களும் சேர்க்கப்பட்டனர். பிரசித்திப் பெற்ற பல சோவியத் ராணுவ தளபதிகள் அவர்கள் மத்தியிலிருந்து உருவாயினர். 1918 கோடையிலும் இலையுதிர்காலத்திலும் நிலவிய அந்தக் கடுமையான சூழ்நிலையில் இளம் செஞ்சேனை தனது முதல் வெற்றியை ஈட்டியது.

நேற்றைய தொழிலாளர்களும் விவசாயிகளும் போர்வீரர்களும் ஜெனரல்களாக வளர்ச்சியுற்றனர் — காலம் அத்தகையதாய் இருந்தது. அவர்களில் பலரின் பெயர்கள் வீரசாகச வரலாற்றில் இடம் பெறலாயின.
தோழரே! போரில் நீங்கள் காட்டிய தீரத்துக்காக இந்த விருதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
தளபதித் தோழரே! உங்கள் முகம் எனக்குப் பரிச்சயமானது போல் இருக்கிறது. 1915ல் ஜாரிஸ்டு கொடிய கட்டாய உழைப்பு முகாமிலிருந்து உங்களுடன் சேர்ந்தல்லவா நான் தப்பித்து ஓடினேன்?
புகழ்ப் பெற்ற ராணுவ தளபதி, உள்நாட்டு யுத்த வீரர் மிகையில் ஃப்ருன்ஸே, ராணுவ டாக்டரின் உதவியாளரின் குடும்பத்தில் பிறந்தவர். புரட்சிப் படையில் முழு நேரம் பணியாற்றிய இவர், உள்நாட்டு யுத்தத்தின் போது படைகளுக்கும் போர் முனைகளுக்கும் தலைமை தாங்கியவர்.
இந்தப் பக்கத்திலிருந்து இரண்டு ராணுவ தளபதிகள் நம்மைத் தாக்குகிறார்கள், இங்கிருந்து அட்மிரல் கல்சாக் நேரில் தாமே தலைமை தாங்கிப் படையெடுத்து வருகிறார்.
ஆ! ஒரு சாதாரண படையாள் தனக்கு எதிராய்ப் படைகளுக்குத் தலைமை தாங்குகிறார் என்று அவர்களுக்குத் தெரிந்தால்!
எவ்வளவு பிரமாதமாகத் தலைமை தாங்கி போராடுகிறார்!
அபாரத் திறமை படைத்த ராணுவ தளபதி, உள்நாட்டு யுத்த வீரர் வாஸிலி சப்பாயெவ் ஒரு ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். முதல் உலக யுத்தத்தில் காட்டிய வீரதீரத்துக்காக மூன்று முறை புனித ஜார் சிலுவை பெற்றவர் (அது ஜாரிஸ்டு ருஷ்யாவின் மிக உயர்ந்த போர்வீரன் விருது). உள்நாட்டு யுத்தத்தின் போது அவர் தலைமையிலான படைப்பிரிவு பலம் மிக்க வெள்ளைப் படையினரை எதிர்த்துப் பல மகத்தான வெற்றிகளைப் பெற்றது.

தளபதித் தோழரே, கவலைப்படாதீர்கள். நர்ஸ் வரும் வரை நான் காத்திருப்பேன்...
ஆனால், இதுதான் என் உண்மையான உத்தியோகம். எந்த நர்ஸையும் விடக் காயத்துக்குக் கட்டுப் போடுவதில் நான் வல்லவன்.
1918ல் ஒன்றிணைக்கப்பட்ட கொரில்லா படைப் பிரிவின் தளபதியாக இருந்தவரும், உள்நாட்டு யுத்த வீரருமான நிக்கொலாய் ஷோர்ஸ் ரயில்வே எஞ்சின் டிரைவரின் குடும்பத்தில் பிறந்தவர். முதல் உலக யுத்தத்தில் போர்க்களத்தில் மருத்துவ துணையாளராகப் பணியாற்றியவர் (பின்னாளில் ஒரு கீழ்நிலை அதிகாரி). சோவியத் ஆட்சியதிகாரத்துக்காகப் போராடிய போது 1919ல் 24வது வயதில் கொல்லப்பட்டு போனார்.
நீங்கள் ஏன் செஞ்சேனையில் சேர்ந்திருக்கிறீர்கள் என்று எனக்குப் புரிகிறது. புரட்சி உங்களிடமிருந்து எதையும் பறித்துக் கொள்ளவில்லை... ஆனால் நானோ உயர்குடியைச் சேர்ந்த பிரபு.
நானும் ருஷ்யப் பிரபு வம்சத்தைச் சேர்ந்தவன்தான். இப்போது என் தாய் நாட்டுக்குப் பணியாற்றுகிறேன்.
சோவியத் ராணுவ தளபதியும் உள்நாட்டு யுத்த வீரருமான மிகையில் துகச்சேவ்ஸ்கி பிறப்பால் ஒரு பிரபு. முதல் உலக யுத்தத்தின் போது ஜாரிஸ்டு ராணுவத்தில் ஒரு அதிகாரியாயிருந்தார். 1918லிருந்து செஞ்சேனையில் இருக்கிறார்.
உண்மையான தேசபக்தர்கள் அனைவரும், அவர்கள் சமூகத்தின் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களாயினும் மக்களோடு சேர்ந்து தாயகத்தைக் காப்பாற்றுவதற்காக முன் வந்தனர்.
அப்படிப்பட்ட காலம் அது!

ஏத்தனையோ வல்லரசுகள் அல்லவா ருஷ்யாவை எதிர்க்கின்றன! நம்மால் தப்பிப் பிழைக்க முடியுமா?
இது வர்க்கப் போராட்டம் என்பதை மறக்கலாகாது. உலகெங்கிலும் உள்ள தொழிலாளர்களிடையே நாம் ஏராளமான நண்பர்களைப் பெற்றிருக்கிறோம்.
இருந்தாலும் அவர்களால் நமக்கு எவ்வாறு உதவ முடியும்?


லண்டன் துறைமுகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்
தோழர்களே! நமது ருஷ்ய சகோதரர்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டும்! இவற்றையெல்லாம் இங்கிருந்து அவர்கள் திரும்ப எடுத்துச் செல்லும் வரை நாம் வேலை நிறுத்தம் செய்வோம்!
நமது துறைமுகத்தின் மூலம் ருஷ்யாவுக்கு எதிராக ஒரு ஆயுதம் கூட போய்ச் சேர அனுமதியோம்!

அமெரிக்கா
எங்கள் மகன்களைத் திருப்பி அனுப்புங்கள்!
சோவியத் ருஷ்யாவின் மீது கை வைக்காதே

ருஷ்யாவில் ராணுவத் தலையீட்டாளர்களையும் வெள்ளைப்படையினரையும் எதிர்த்துப் போராட சர்வதேசப் படைப்பிரிவுகளை அமைத்தது ஒருமைப்பாட்டு உணர்வுக்கு ஒரு தெளிவான அடையாளமாகத் திகழ்ந்தது.
இப்போது நீங்கள் அனைவரும் செஞ்சேனை வீரர்கள். நீங்கள் பல நாடுகளிலிருந்து வந்திருக்கிறீர்கள். அந்நிய மொழியில் இடப்படும் ராணுவ ஆணைகளை உங்களால் புரிந்து கொள்ள இயலுமா?
எங்களால் புரிந்து கொள்ள முடியும், தளபதித் தோழரே! இப்பொழுது நாம் அனைவரும் பேசுவது ஒரே மொழிதான் — புரட்சியின் மொழிதான்!

அக்டோபர் புரட்சியின் முதலாம் ஆண்டு நிறைவு.
பெட்ரோகிராடு, 1918 நவம்பர் 7 (புதிய முறை)
இந்தக் கடைக்காரர்களுக்கு வெறி பிடித்து விட்டது! ஒரு பவுண்டு கருப்பு ரொட்டிக்காக நான் உயர்கம் பளத்தாலான எனது சிறந்த தலைக் குட்டையைக் கொடுக்க வேண்டியிருந்தது! உன் கணவர் சோவியத்தில் அங்கம் வகிக்கிறாரே, அவர் இதற்கு ஏதாவது செய்யக் கூடாதா?
உணவும் கச்சாப்பொருளும் எரிபொருளும் தருகிற பிரதேசங்களிலிருந்து சோவியத்துகள் ஏற்கெனவே துண்டிக்கப்பட்டு விட்டன.
உக்ரைனின் தானியமும் மாமிசமும் பாகூவின் எண்ணெயும் இல்லாமல் இவர்கள் எப்படி நீடிக்கப் போகிறார்கள் பார்ப்போம்!
... மற்றும் டனேத்ஸ்க் நிலக்கரியும் துருக்கிஸ்தான் பஞ்சும் இல்லாமல்... 40 சதவீத தொழிற்சாலைகள் ஓய்ந்து கிடக்கின்றன. அதனால் இந்த சோவியத் ஆட்சியின் இரண்டாவது ஆண்டு நிறைவு இருக்கப் போவதில்லை!

அக்டோபர் புரட்சியின் முதல் ஆண்டு விழா நீடூழி வாழ்க!
இன்னும் இரண்டொரு வாரத்தில் இந்தத் தனியார் வாணிபம் தடைசெய்யப்பட்டு, உணவு பொருள்கள் நியாய முறையில் உழைக்கும் மக்களுக்கு விநியோகிக்கப்படும் என்கிறார் என் கணவர்.
அதுதான் சரி! இம்மாதிரி காலத்தில் அப்படித்தான் செய்ய வேண்டும்!
நான் வடக்குப் போர் முனையிலிருந்து வருகிறேன். தலையீட்டுக்காரர்களையும் வெள்ளைப்படையினரையும் முன்னேறாமல் தடுத்து நிறுத்தி விட்டோம்.
தெற்கில் நமக்கு இன்னும் தொல்லைகள் நீடிக்கின்றன. டான் பகுதித் தாக்குதல் தோற்று விட்டது. வடக்கு காக்கஸஸில் நமது 11வது சேனை முறியடிக்கப்பட்டுள்ளது.
கடுமையான ராணுவ நிலைமை, அழிவு, பட்டினி, எதிரிகளின் சதித் திட்டங்கள் இப்படிப் பலவற்றையும் மீறி
சோவியத் அரசு அழியாது நிலைத்து நின்றது தொடர்ந்து போராடியது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு **ஜெர்மனியில்**

1918 நவம்பர் மாதம் ஜெர்மனியில் புரட்சி வெடித்து நாட்டைக் குலுக்கிற்று. முடியரசு வீழ்ந்தது. என்னும் பிற்போக்கு அதிக பலம் பெற்றிருந்ததால் 1919 மே மாதத்தில் மக்கள் குடியரசு ரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டது. பூர்ஷ்வா குடியரசு நிறுவப்பட்டது.

ருஷ்யாவில் நடந்த அக்டோபர் புரட்சியின் தாக்கத்தால் உந்தப்பட்டு ஹங்கேரியில் புரட்சி மூண்டெழுந்தது. 1919 மார்ச் 21ம் தேதி ஹங்கேரிய சோவியத் குடியரசு பிரகடனமாயிற்று.

1919 ஆகஸ்ட் முதல் நாள் வரை இக்குடியரசு நீடித்தது.

பிரான்ஸ்

காம்பியேன் காட்டில் ஒரு ரயில் பெட்டியில் நேச உடன்படிக்கை நாடுகளும் ஜெர்மனியும் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

1918 நவம்பர் 11ம் தேதி

ஜெர்மனிக்கும் நேச உடன்படிக்கை நாடுகளுக்குமிடையே போர் நிறுத்த ஒப்பந்தம் முடிவாயிற்று.

உலக மகாயுத்தம் முடிவடைந்தது

1918 இலையுதிர்கால நிகழ்ச்சிகளால் சர்வதேச சூழ்நிலை கணிசமாக மாறி விட்டது. இயற்கையாகவே இது சோவியத் ருஷ்யாவின் நிலைகளிலும் பாதிப்பை ஏற்படுத்தியது.

1918 நவம்பர் இறுதியில் எஸ்தோனிய சோவியத் குடியரசு அமைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து டிசம்பரில் லாத்வியாவிலும் லிதுவேனியாவிலும் சோவியத் ஆட்சியதிகாரம் நிறுவப்பட்டது.

1919 ஜனவரி முதல் தேதி பெலாருஷ்யாவின் தாற்காலிக சோவியத் அரசாங்கம் அமைக்கப்பட்டது.

1918 நவம்பர் 15ம் தேதி இரவில்

ஆங்கிலோ-பிரெஞ்சு போர்க் கப்பல்கள் கருங்கடலினுள் நுழைந்து ருஷ்யாவின் கரைகளை நோக்கிச்சென்றன. அவற்றைத் தொடர்ந்து டார்டனெல்ஸ், பாஸ்போரஸ் கடற்கால்கள் வழியே துருப்புக்களும் ஆயுதங்களும் குண்டுகளும் அனுப்பப்பட்டன. புரட்சிப் புயலில் சிக்குண்ட ஜெர்மனி சோவியத் அரசை எதிர்த்துத் தொடர்ந்து போராட இயலாமற் போனதும் இவ்வாறு நேச உடன்படிக்கை நாடுகள் "செயல்பட" முற்பட்டன.

நோவரஸ்ஸிய்ஸ்கில் பிரிட்டிஷ் படைகள் வந்து இறங்கின.
நேச உடன் படிக்கை நாடுகள் ஜெர்மனியைத் தோற்கடித்தன. இதனல் இந்நாடுகள் மேலும் அதிகப் படைகளை அனுப்பி சோவியத்துகளுக்கு எதிராகத் தலையீட்டு யுத்தம் நடத்த முடிந்தது.
பிரெஞ்சுப் படைகள் ஒடெஸ்ஸாவையும் செவஸ்தோபலையும் பிடித்துக் கொண்டன.
என்ன இது? பத்து நிமிடம் கண்ணயர்ந்தேன். எங்கிருக்கிறோம் என விழித்துப் பார்த்தால் மர்ஸேய்யாக இருக்கிறதே!
இல்லை, இல்லை. இது மர்ஸேய் அல்ல; ஒடெஸ்ஸா வந்திருக்கிறோம்.

செஞ்சேனையிடம் இவற்றைப் போன்ற டாங்கிகள் இல்லை, இம்மாதிரியான ஒரு சைத்தானுடன் மோதிப் பாருங்கள்!
இவை தரையிலே ஊர்ந்து செல்பவை; அதே போது சுடவும் செய்கின்றன.
அப்பா! இந்த மிருகங்கள் எப்படிப் பட்டவை? உடம்பெல்லாம் இரும்பாக இருக்கிறது ... இவை கடலிலும் நீந்திச்செல்கிறவையா?
1918 நவம்பர் 22 முதல் 27 வரை...
போல்ஷிவிக்குகளைச் சிறை பிடித்து விட்டார்கள்... மெய்யாகவே இதுதான் முடிவா?
இல்லை! நாம் தலை மறைவாய்த் தொடர்ந்து போராடுவோம்!
பிரிட்டிஷ், பிரெஞ்சுப் படையாட்களும் தொழிலாளிகளும் விவசாயிகளும் தானே! யாரை எதிர்த்துச் சண்டை போடுகிறோம் என்பது அவர்களுக்குப் புரியவில்லையா என்ன?...

போல்ஷிவிக்குகளின் தலைமறைவு கமிட்டி ஒடெஸ்ஸாவில் இருந்த பிரெஞ்சு படையாட்களிடையிலும் ஏனைய படையாட்களிடையிலும் கிளர்ச்சி செய்வதற்காக "அயல்நாட்டுக் குழுமம்" ஒன்றை நிறுவிற்று.

மாஸ்கோவில் பிரெஞ்சு கம்யூனிஸ்டு குழுவின் அமைப்பாளரும் செயலாளரும், ஒடெஸ்ஸாவில் "அயல்நாட்டுக் குழுமத்தை" அமைத்தவருமான ஜீன் லபூர்ப் என்னும் பிரெஞ்சுப் பெண்ணும் உட்படப் பல தலைமறைவு கம்யூனிஸ்டுகள் தலையீட்டுப் படையினரால் பிடிக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தலைமறைவு இயக்கத்தை நசுக்கி ஒடுக்க எடுத்த முயற்சிகள் யாவும் வியர்த்தமாயின. பிரெஞ்சுக் கப்பற்படையின் மாலுமிகளிடையே ஒரு கலகம் வெடித்தெழுந்தது.

உடனடியாக ருஷ்யாவிலிருந்து தங்கள் படைகளைத் திரும்ப அழைத்துக் கொள்ளும் அளவுக்குப் புரட்சி இயக்கம் பிரெஞ்சு அரசாங்கத்தைக் கிலியுறச் செய்தது. அதைத் தொடர்ந்து பிரிட்டிஷ் படைகளும் காஸ்பியன் பிராந்தியங்களிலிருந்து வாபஸாயின.

தெற்கு உக்ரைனிலும் கிரீமியாவிலும்
சோவியத் ஆட்சியதிகாரம் மீண்டும் நிலைநாட்டப்பட்டது.

10–257

சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் கவனத்தைத் திசை திருப்புவதற்காகவும், தாங்கள் சமாதானத்தையே விரும்புவது போல் காட்டிக் கொள்வதற்காகவும், ஏகாதிபத்திய அரசுகள் 1919ம் ஆண்டு பிப்ரவரியில் பிரின்ஸ் தீவுகளில் ஒரு மாநாட்டைக் கூட்டுவதென்றும் அதில் சோவியத் அரசு தரப்பினரும் ருஷ்யாவில் இன்னமும் இயங்கிக் கொண்டிருந்த எதிர்ப்புரட்சிக்காரர்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வதென்றும் ஒரு திட்டத்தை முன்மொழிந்தன.

இருந்தும் கூட ஏகாதிபத்தியங்களின் கபடத் திட்டம் தகர்ந்து போயிற்று. சோவியத் அரசு பிரின்ஸ் தீவுகளுக்கு ஒரு தூதுக் குழுவை அனுப்ப உடன்பட்டது.

1919 வசந்த காலத்தில் நேச உடன்படிக்கை நாடுகள் சோவியத் அரசின் மீது ஒரு புதிய தாக்குதலை ஆரம்பித்தன. ருஷ்ய அரசு முன்மொழிந்த சமாதான யோசனைகளுக்கு சர்வதேச ஏகாதிபத்தியம் இப்படித்தான் பீரங்கிகளால் மறுமொழியளித்தது.

நீ எங்கே போகிறாய்? நான் வடக்கே போகிறேன். ஆங்கிலேயர்களும் அமெரிக்கர்களும் அங்கே தாக்குதல் தொடுத்திருக்கிறார்கள்.
நான் டெனிக்கினை எதிர்த்துப் போராடத் தெற்கே போகிறேன்.
1919 வசந்தத்தில்
நேச உடன்படிக்கை நாடுகள் உள்நாட்டு எதிர்ப் புரட்சியாளர்களையும் வெளி நாட்டுத் தலையீட்டாளர்களையும் ஒன்றிணையச் செய்தன.
சோவியத் ருஷ்யா ஒரே நேரத்தில் பல முனைகளில் போராட வேண்டியதாயிற்று.
ஜெனரல் டெனிக்கின், ஆங்கிலேய ஜெனரல்கள், அட்மிரல் கல்சாக்
ஆங்கிலேய கனவான்களே! இது என்னை அவமதிப்பதாயிருக்கிறது! ருஷ்யாவின் தலை அதிபராக கல்சாக்கை அறிவித்திருக்கிறீர்களே, ஏன்?
இப்போது எதற்கு விவாதம்? நாம் வோல்கா நதிக்கரையில் சந்திக்கும் போது எல்லாவற்றையும் பேசித் தீர்த்துச் சரி செய்து கொள்ளலாம்.
நாட்டின் கிழக்கு எல்லையில் வலிமை பொருந்திய 4,00,000 பேர் கொண்ட சேனையை உருவாக்க
அட்மிரல் கல்சாக்குக்கு
நேச உடன்படிக்கை நாடுகள் உதவின.
சோவியத் அரசுக்கு அது மிகப்பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது.

யூரல் பிரதேசத்தைக் கல்சாக்கிடமிருந்து மீட்பதற்காக நான் கிழக்கே செல்கிறேன்!
நான் மேற்கே போகிறேன். ஜெர்மானியர்களும் வெள்ளைப் படையினரும் ஆங்கிலேயர்களும் பால்டிக் பிரதேசங்களுக்கு எதிராக குவிகின்றனர்!
1919 மே மாதம்
கிழக்குப் பகுதியில் கல்சாக்கின் படைகளைச் செஞ்சேனை அடியோடு அழித்த அதே சமயம் யுடேனிச்சின் படைகள் பெட்ரோகிராடின் மீது தாக்குதல் நடத்தின. செஞ்சேனை இப்படைகளைத் தடுத்து நிறுத்தி எதிரிகளை நகரத்திலிருந்தே விரட்டி அடித்தது.
1919 கோடையில்
தூரக் கிழக்கிலும் சைபீரியாவிலும் தோன்றிய விவசாயிகளது கொரில்லா படை இயக்கம், கல்சாக் சேனைக்குப் பின்னாலிருந்து பெருஞ் சக்தியாக உருவாயிற்று.
அங்குதான் அவனைச் சந்திக்கப் போகிறோம்!
ஆ! யூரல் பகுதியில் செஞ்சேனை கல்சாக்குக்கு செம்மையாய் அடி கொடுத்தது! இப்போது கிழக்கு திசையில் முன்னேறுகிறது...
செஞ்சேனையும் கொரில்லாப் படைகளும் ஒன்றிணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாகக்
கல்சாக்கின் படை
தகர்க்கப்பட்டது.
நாட்டின் வடபகுதியில் தலையீட்டாளர்களுக்கு எதிராகத் தீர்மானகரமான வெற்றிகள் கிட்டின.



1919 கோடையில்

நேச உடன்படிக்கை நாடுகளிடமிருந்தும் அமெரிக்காவிடமிருந்தும் தாராளமான ராணுவ உதவியைப் பெற்ற டெனிக்கினின் படைகள் தெற்கு போர் முனை நெடுகிலும் தாக்குதல் தொடுத்தன.

மாஸ்கோவின் மீது டெனிக்கின் தாக்குதல் தொடுத்த அதே நேரத்தில் பூர்ஷ்வா போலந்தின் 1,00,000 பேர் கொண்ட படைகள் மேற்கே இருந்து முன்னேறி வந்து கொண்டிருந்தன.

யுடேனிச் திரும்பவும் பெட்ரோகிராடு மீது படையெடுத்தார்.



எதிர்ப்புரட்சியாளர்களையும் வெளிநாட்டு தலையீட்டாளர்களையும் எதிர்த்து போர் முனையிலும் பகைவன் படையணிக்குப் பின்புறமிருந்தும் மெய்யான மக்கள் யுத்தம் கிளர்ந்தெழுந்தது.

தலைமறைவான நிறுவனங்களும் கொரில்லாப் படைகளும் செஞ்சேனைக்குப் பெருமளவில் உதவி புரிந்தன.

பிரிட்டன், பிரான்ஸ், நார்வே, பிற நாடுகளின் தொழிலாளி வர்க்கத்தினர் தலையீட்டை தடுத்து நிறுத்த முன்வருமாறு அவர்களது வர்க்க சகோதரர்களான ருஷ்யத் தொழிலாளி வர்க்கத்தாரின் அறை கூவலுக்கு ஆர்வத்துடன் செவி மடுத்தனர்.

1920 ஆரம்பத்தில் நேச உடன்படிக்கை நாடுகளின் அரசாங் கங்கள் சோவியத் நாட்டில் இருந்து தங்களது துருப்புக்களைத் திருப்பி அழைத்துக் கொள்ள வேண்டியதாயிற்று.

இன்னமும் கூட ஏகாதிபத்தியவாதிகள் தங்களது ராணுவ பலத்தால்
சோவியத் ருஷ்யாவைத் தகர்த்து விட முடியும் என்று நப்பாசை கொண்டிருந்தன.
1920 ஏப்ரலில்...
பூர்ஷ்வா போலந்து
பெட்ரோகிராடு
மாஸ்கோ
கீவ்
விராங்கெல் பிரபு
லெனின் சித்தரித்துக் காட்டுவது போல பூர்ஷ்வா, நிலப்பிரபுத்துவ
போலந்து அரசும், விராங்கெல் பிரபுவும் சர்வதேச ஏகாதிபத்தியத்தின்
இரு கரங்களாகச் செயல்பட்டனர்.

போலந்து சேனை சோவியத் உக்ரைன் பிரதேசத்தின் மீது
படையெடுத்து கீவ் நகரத்தைக் கைப்பற்றிக் கொண்டது.
மறுபடியும் போர்முனைக்கா? கல்சாக்கை எதிர்த்து, டெனிக்கினை எதிர்த்து, இப்போது போலந்துக்காரர்களை எதிர்த்து...
போலந்துக்காரர்களை எதிர்த்து அல்ல; போலந்தின் மேல்தட்டு வர்க்கத்தினரை மட்டும் எதிர்த்து...
அக்காலத்தில் போல்ஷிவிக் கட்சியின் மத்திய கமிட்டி இவ்வாறு
பிரகடனம் செய்தது: "எங்களைத் தாக்கிய போலிஷ் வெள்ளைப்
படையினரின் தோல்வி, போலந்து நாட்டின் விடுதலை குறித்த எங்கள்
நிலையை இம்மி அளவு கூட மாற்றப் போவதில்லை.

பிரபுவே! செஞ்சேனை சிவாஷ் குடாவைக் கடந்து விட்டது! அவர்கள் நம் பின்பக்கம் வந்து விட்டார்கள்!
நடைபெறும் காரியமல்ல! இயேசுநாதரைத் தவிர வேறு யாராலும் நீர் மேல் நடக்க முடியாது!
நீர் மட்டம் இறங்கிய இரவுவேளையில் சிவாஷ் குடாவைக் கடந்து
வந்து, எதிரிகளை பின்புறமிருந்து வளைத்துக் கொண்டது செஞ்சேனை.
பகைவனின் அசைக்க முடியாத கோட்டைக்
கொத்தளங்கள் எல்லாம் பிடிபட்டன.
விராங்கெல் பிரபுவின்
சேனை நிர்மூலமாக்கப்
பட்டது.
பூர்ஷ்வா போலந்தின் மீதும் விராங்கெல்
பிரபுவின் மீதும் செஞ்சேனை பெற்ற
வெற்றியானது ருஷ்யாவில் சோவியத் ஆட்சியதிகாரத்தை
அழிப்பதற்கு நேச உடன்படிக்கை நாடுகள் செய்த
முயற்சிகள் யாவும் படுதோல்வியடைந்து
விட்டதைக் குறித்தது.
1921 வாக்கில் உள்நாட்டு யுத்தம்
கிட்டத்தட்ட முடிவடைந்தது.

உள்நாட்டு யுத்தம் முடிவதற்குள் ருஷ்யக் கிராமப் புறம் கோடிக் கணக்கில் ஆடவர்களை இழக்க நேர்ந்தது.

1920ல் பெருந் தொழில்களின் உற்பத்தி அளவு 1913ல் இருந்ததில் 13.8 சதவிகிதமாகக் குறைந்து விட்டது. யுத்தத்துக்கு முன் இருந்த மொத்த தங்கக் கையிருப்பில் மூன்றில் ஒரு பங்கை யுத்த காலத்தில் ருஷ்யா இழந்து விட்டது.

நாட்டில் சோஷலிசத்தைக் கட்டியமைத்திடும் பணி மிகமிக கடினமான சூழ்நிலையில் ஆரம்பமாயிற்று. தூரக் கிழக்கில் பல இடங்களைப் பிடித்துக் கொண்டு விட்ட ஜப்பானிய ஆக்கிரமிப்புப் படைகளை எதிர்த்து கடும் போராட்டம் நடைபெற்று வந்தது; இன்னும் ஒழியாது எஞ்சியிருந்த வெள்ளைப்படையினர், உள்ளூர் தேசியவாதிகள் ஆகியோரது கலகங்கள் மத்திய ஆசியா, டிரான்ஸ்காக்கேசியா முழுதும் மூண்டெழுந்து கொண்டிருந்தன; ஏழாண்டுக் கால ஏகாதிபத்திய யுத்தமும் உள்நாட்டு யுத்தமும் அளவு கடந்த பொருளாதார நாசம் விளைவித்திருந்தன.

தொழிலாளர் கல்வித் துறையில்.
பேராசிரியர் அவர்களே! நாங்கள் மாணவர்களாகச் சிறப்படைவதற்கில்லை. நாங்கள் போய் வருகிறோம்... ஒரு புதிய வாழ்வைக் கட்டி அமைத்தாக வேண்டும்! கல்வி கற்க நேரமில்லை!
அந்தப் புதிய வாழ்வைக் கட்டுவது எப்படி என்கிற கல்வியைக் கற்பதற்காகத்தான் நீங்கள் இந்தத் தொழிலாளர் கல்வித் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறீர்கள். எனவே படிப்பதற்காகவும் நீங்கள் கொஞ்சம் நேரம் ஒதுக்கிக் கொள்ள வேண்டும்!
1915ல் 91ஆக இருந்த உயர் கல்வி நிலையங்கள் **1921**ல் **244**ஆக உயர்ந்தன. **13,000** புதிய பள்ளிகள் திறக்கப்பட்டன. தாய்மொழியிலேயே பாடங்கள் போதிக்கப்பட்டன. மாணவர்களுக்குக் கல்வி முற்றிலும் இலவசமாயிற்று!

1920 அக்டோபர் 6ம் தேதி
ஆங்கில மொழியில் விஞ்ஞானப் புதினங்கள் படைத்து உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர் ஹெச்.ஜி. வெல்ஸ் மாஸ்கோவில் லெனினைச் சந்தித்தார்.
என்ன! அடியோடு சிதைந்து கிடக்கும் ருஷ்யாவை மின்சாரமயமாக்குவதா?! தாங்கள் என்னையும் மிஞ்சிய கற்பனாவாதியாக இருக்கிறீர்களே!
ருஷ்யாவை மின்சாரமயமாக்கும் திட்டம் (கோயெல்ரோ திட்டம்)
இன்னும் சில ஆண்டுகள் கழித்து நீங்கள் இங்கு மறுபடியும் வந்து எங்களைப் பார்க்க வேண்டும்!
சோஷலிசத்தைக் கட்டுவதற்கான அந்த மாபெரும் திட்டங்கள் நடக்க முடியாதவை என்று அக்காலத்தில் பலருக்குத் தோன்றியது. ஒரு மாபெரும் புரட்சியை நடத்திய நாடு பொருளாதார, கலாசார வாழ்க்கையிலும் அரும்பெரும் சாதனைகளை சாதிக்க வல்லது என்பதைக் காலம் எல்லாருக்கும் நிரூபித்துக் காட்டியது.

1922ல்
நாம்
மாஸ்கோவிடமிருந்து
நல்விடை பெறுகிறோம்.
எப்படிப்பட்ட ஆண்டு
அது? . . .
உள்நாட்டு யுத்தத்தின் கடைசித் தளங்களும்
துடைத்தெறியப்பட்டு,
புரட்சி வெற்றிகரமாகத்
தன்னை பாதுகாத்துக்
கொண்டதைக்
குறித்த ஆண்டு அது...
ஆஹா! வாழ்க்கை மெய்யாகவே இப்போதுதான் தொடங்குகிறது! நம்மால் காலங்களைக் கடந்து வருங்காலத்தை – 1988 என்று வைத்துக் கொள்ளுங்களேன் – பார்க்க முடிந்தால்... சோஷலிச எதிர்காலத்தைச் சேர்ந்த மக்கள் எப்படிப்பட்டோராய் இருப்பார்கள்?
சிறப்புக்குரிய நாள் இது – பிறந்த நாள் விழாவைக் குறிப்பது
இதோ, நமது குழந்தைகளான இவர்களே அந்த சோஷலிச எதிர்காலத்தின் மக்களாக இருக்கப் போகிறவர்கள்!
கொண்டாட்டம் தான்! நாளைக்குப் புத்தாண்டு!
நமது அரசின் பிறந்த நாள்.

. . . 34 நாடுகளின்
மாநாடு ஜெனோவாவில்
நடைபெற்றது.
தேசங்களிடையே
சமாதானத்தை
வலுப்படுத்தவும்,
உலகளாவிய படைக்கல
ஒழிப்பிற்குமான
ஒரு திட்டத்தை
சோவியத் பிரதிநிதிக்
குழு முன்மொழிந்தது.
சர்வதேச அரங்கில்
சோவியத் ருஷ்யா முதல்
அடியெடுத்து வைத்தது . . .
. . . மாஸ்கோவில் சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் பூரண அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள்
சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம்
என்ற பெயரில் ஒரே அரசு அமைப்பை ஏற்படுத்தும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர். இந்த அரசின் உதயம் 1917ம் ஆண்டு ருஷ்யப் புரட்சிக்கு சிகரம் வைத்தாற்போல் அமைந்தது.
அப்பா! நான் பெரியவனாகியதும் விமானி ஆக முடியுமா?
நீ நேரே விண்மீன்களுக்கே பறந்து விட்டு வருவாய், மகனே!


வி. இ. லெனின்
புரட்சிகரமான வாய்ச்சொல்
(1987)
இந்தச் சிறிய புத்தகத்தில் ருஷ்யப் புரட்சியின் நிகழ்ச்சிகளைப் பற்றி நாங்கள் சொல்லி இருக்கிறோம்.
மேலும் தெரிந்து கொள்ள விரும்புகிறீர்களா?
முன்னேற்றப் பதிப்பகம் வெளியிடும் புத்தகங்களைப் படிக்கவும்
ஏ. படாலவ்
புரட்சி பற்றிய லெனின் தத்துவம்
(1986)
S


ஜான் ரீடு
உலகை குலுக்கிய பத்து நாட்கள்
(1987)
C
D
E
எம். அ. பேர்சிட்ஸ்
சோவியத் நாட்டில் இந்தியப் புரட்சிவீரர்கள்
(1987)
I
உண்மையில் நடந்தது என்ன என்பதை நேரில் தெரிந்து கொள்ளும் நோக்கத்துடன் ருஷ்யப் புரட்சியைக் கண்டறியும் இந்த சுற்றுலாவில் உங்களுக்குத் துணையாய் உடன் வந்தவர்கள் இந்த நூல் ஆசிரியர்கள் எலேனா தப்ரவோல்ஸ்கயா, யூரி மக்காரவ், ஓவியர் அனதோலி வசீலியெவ் மற்றும் எழுத்துக் கலைஞர் ஐ. வெச்சேரின

சோவியத் புரட்சி மனிதச் சமுதாயத்தை ஒரு பெரும் பாய்ச்சலால் முன்னேற்றியிருக்கிறது; அது அணைக்க முடியாத ஒரு பிரகாசமான தீபத்தை ஏற்றியிருக்கிறது; உலகம் முன்னேறக் கூடிய ஒரு புதிய நாகரிகத்திற்கான அடிப்படையை நிறுவியுள்ளது.

ஜவகர்லால் நேரு

முன்னேற்றப் பதிப்பகம் ISBN 5-01-000873-4